ஸ்ரீ:

நாரத-பக்தி-ஸூத்திரங்கள்

(नारद भक्ति सूत्राणि)

உரை ஆசிரியர்

"அண்ணா"

ஸ்ரீ ராமகிருஷ்ண மடம்

11, ராமகிருஷ்ண மடம் சாலை,

மயிலாப்பூர் : : சென்னை - 600004.

ஸ்ரீ:

நாரத-பக்தி-ஸூத்திரங்கள்

உரை ஆசிரியர்

"அண்ணா"

ஸ்ரீ ராமகிருஷ்ண மடம்

11, ராமகிருஷ்ண மடம் சாலை,

மயிலாப்பூர் : : சென்னை - 600004.

Published by
© The President
Sri Ramakrishna Math
11, Ramakrishna Math Road,
Madras - 600004

First Edition
I - 3M 3C. - 8 - '77

The Paper used in printing this book was made available by the Govt. of India at a concessional rate

Price Rs. 3 - 00

**Printed in India
Lashmi Vijayam Press,
Madras - 600005**

நாரத பக்தி சூத்திரங்கள்

अथातो भक्ति व्याख्यास्यामः ॥ १ ॥

அதாதோ பக்திம் வ்யாக்யாஸ்யாம: ॥ 1 ॥

(அத) மங்களகரமாக (அத:) இனி (பக்திம்) பக்தியை (வ்யாக்யாஸ்யாம:) விளக்குவோம்.

அத—ஓங்காரமும் 'அத' எனும் சொல்லும் பிரம்மாவின் முகத்திலிருந்து ஆதியில் வந்த சொற்களென்றும் மங்களத்தைக் குறிப்பவை என்றும் கூறப்படுகின்றன.

அத—'இனி' என்றால் சாஸ்திரத்திலும் குருவினிடமும் தெய்வத்திடமும் நன்னம்பிக்கையும் பக்தியில் ஆர்வமும் உண்டாகிய பின்.

सात्वस्मिन् परमप्रेमरूपा ॥ २ ॥

ஸாத்வஸ்மின் பரம - ப்ரேம - ரூபா ॥ 2 ॥

(ஸா) அது—அதாவது பக்தி—(து) என்னவென்றால் (அஸ்மின்) இந்த பகவானிடத்தில் (பரம-ப்ரேம-ரூபா) உத்தமமான அன்பு வடிவமாகும்.

பரமப்ரேம - ரூபா. (பாட பேதம்)

உத்தமமான அன்பின் அடையாளங்கள் மூன்று; (1) அகங்காரமும் சுயநலமும் இன்மை (2) வேறு எந்த விஷயத்திற்கும் இருதயத்தில் இடமின்மை (3) தன்னை முற்றும் மறந்திருக்கும் தன்மை.

अमृतस्वरूपा च ॥ ३ ॥

அம்ருதஸ்வருபா ச ॥ 3 ॥

(ச) மேலும் (அம்ருத-ஸ்வருபா) அமிருதஸ்வருப மானது.

அம்ருதம் ; தேவர்கள் பாற்கடலைக் கடைந்து பெற்ற எந்த அமுதத்தை உண்டு இன்பத்தையடைந்தார்களோ அதிலும் சிறந்தது பக்தியினுல் பெறப்படும் இன்பம். அதை ஆராவமுது என்கிருர் நம்மாழ்வார். அது நோயும் மூப்பும், சாவும் இல்லாத முக்தி என்னும் நிலை.

பகவத்கீதை பக்தியோகத்தை 'தர்ம்யாம்ருத-மிதம்,' எனக் கூறுகிறது. தர்ம்யமாவது தர்ம-அர்த்த-காமம் எனும் பிரவிருத்தி தருமத்தின் பயன். அம்ருதமாவது நிச்ரேயஸம், மோக்ஷம், வீடு, உயர்வற உயர்நலம் எனும் நிவிருத்திமார்க்கத்தின் பயன்.

यल्लब्ध्वा पुमान् सिद्धो भवति, अमृतो भवति, तृप्तो भवति ॥ ४ ॥

யல்லப்த்வா புமான் ஸித்தோ பவதி, அம்ருதோ பவதி, த்ருப்தோ பவதி ॥ 4 ॥

(யத்) எதை (லப்த்வா) அடைந்து (புமான்) மனிதன் (ஸித்தஃ) சித்தனுக (பவதி) ஆகின்ருனே, (அம்ருதஃ) சாவற்றவனுக (பவதி) ஆகின்ருனே (த்ருப்தஃ) திருப்தி யடைந்தவனுக (பவதி) ஆகின்ருனே—அது பக்தி.

லப்த்வா—அடைந்து :—ஒப்பீடுக : 'அவனருளாலே அவன் தாள் வணங்கி'—திருவாசகம். அம்ருதஸ்வருப மான பக்தி பகவத்கிருபையால் அடையப்படுகிறது.

புமான்—மனிதன் என்று பொதுப்படக் கூறியதால் உள்ளத்தில் அன்பு கொண்ட எந்த மனிதனுயினும் அடையக்கூடும். குலம், பதவி, செல்வம் முதலிய பேதங்கள் பக்தியில் இல்லை. ஒப்பிடுக: சூத்ரம் 72.

ஸித்தஃ—அணிமா முதலிய சித்திகளை அடைவது இங்கு கூறப்படவில்லை. உத்தம பக்தன் சித்திகளை விரும்பமாட்டான்.

த்ருப்தஃ— இது ஆசை பூர்த்தியாவதால் வரும் திருப்தியன்று. ஆசையே எழாத திருப்தி. ஒப்பிடுக: ஆப்தகாமம் ஆத்மகாமம் அகாமம் ரூபம் சோகாந்தரம். —பிருஹதாரண்யக உபநிஷத் 4—3—21.

यत्प्राप्य न किंचिद्वाञ्छति, न शोचति, न द्वेष्टि, न रमते, नोत्साही भवति ॥ ५ ॥

யத்ப்ராப்ய ந கிஞ்சித் - வாஞ்சதி, ந சோசதி ந த்வேஷ்டி, ந ரமதே, நோத்ஸாஹீ பவதி ॥ 5 ॥

(யத்) எதை (ப்ராப்ய) அடைந்து (கிஞ்சித்) கொஞ்சமும் (ந வாஞ்சதி) ஆசைப்பட மாட்டானே (ந சோசதி) துக்கப்படமாட்டானே (ந த்வேஷ்டி) பகைக்கமாட்டானே (ந ரமதே) விஷயங்களில் மகிழமாட்டானே (ந உத்ஸாஹீ பவதி) ஆர்வம் கொள்ளமாட்டானே-அது பக்தி.

ஒப்பிடுக: யோ ந ஹ்ருஷ்யதி ந த்வேஷ்டி ந சோசதி ந காங்க்ஷதி ।

சுபா சுப பரித்யாகீ பக்திமான் யஃ ஸ மே ப்ரியஃ ॥

எவன் மகிழ்ச்சியால் பொங்குவதில்லையோ வெறுப்பதில்லையோ, துயரப்படுவதில்லையோ, ஆசைப்படுவதில்லையோ, எவன் நல்லவையுந் தீயவையுமான கருமங்களனைத்தையும் விட்டவனே அவன் பக்தன்; எனக்குப் பிரியமானவன். —கீதை 12·17

இந்த குணங்கள் பக்தனுக்கு அவனுடைய முயற்சியில்லாமல் தாமாகவே உண்டாகின்றன. அயத்னதோ பவந்த்யேதே ந து ஸாதகரூபிணஃ!

ந த்வேஷ்டி— பக்தன் அனைத்தையும் பகவானிடமிருந்து வருவதாய்க் கொள்வதால், வெறுக்கக்கூடியது எதுவுமே அவனுக்கில்லை.

यज्ज्ञात्वा मत्तो भवति, स्तब्धो भवति, आत्मारामो भवति ॥ ६ ॥

யஜ் ஜ்ஞாத்வா மத்தோ பவதி, ஸ்தப்தோ
பவதி, ஆத்மாராமோ பவதி ॥ 6 ॥

(யத்) எதை (ஜ்ஞாத்வா) அறிந்து (மத்தஃ) மதுவுண்டவன்போல் (பவதி) ஆகின்றானோ (ஸ்தப்தஃ) ஜடனைப்போல் (பவதி) ஆகின்றானோ (ஆத்மாராமஃ) ஆத்மாவிலேயே மகிழ்பவனாய் (பவதி) ஆகின்றானோ-அது பக்தி.

ஒப்பிடுக: பாலரொடு பேயர் பித்தர் பான்மையென நிற்பதுவே சிலமிகு ஞானியர் தம் செய்கை பராபரமே.
—தாயுமானவர்

பேயரே எனக்குயாவரும் யானுமோர்
பேயனே எவர்க்கும் இது பேசியென்
ஆயனே அரங்கா என்றழைக்கின்றேன்
பேயனா யொழிந்தேனெம் பிரானுக்கே.
—குலசேகராழ்வார்.

ஸ்ரீமத் பாகவதம் பிரஹ்லாதனைப்பற்றிக் கூறுவதாவது:—அவன் பகவானைப்பற்றிய சிந்தனையால் ஒரு சமயம் அழுவான், ஒரு சமயம் சிரிப்பான், ஒரு சமயம் உரக்கப் பாடுவான். ஒரு சமயம் கதறுவான், வெட்கமின்றிக் கூத்தாடுவான்; ஒரு சமயம் தன்னைக் கிருஷ்ணனாக பாவித்து அவருடைய லீலைகளைச் செய்வான்; ஒரு சமயம் உணர்விழந்து புளகாங்கிதனாய் ஆனந்தபரவசனாய் மூடிய கண்களினின்று பாஷ்பம் பெருக அசைவின்றி மௌனமாயிருப்பான்.

सा न कामयमाना निरोधरूपत्वात् ॥ ७ ॥

ஸா ந காமயமானா நிரோதரூபத்வாத் ॥ 7 ॥

(ஸா) அந்த பக்தி (ந காமயமானா) ஆசை வடிவானதன்று: (நிரோதரூபத்வாத்) விஷய ஆசையை ஒழிக்கும் வடிவானதால்.

பக்தியில் மனது இந்திரிய சுகங்களை வெறுக்கிறது; காமத்தில் இந்திரிய சுகங்களில் மூழ்கிக் கிடக்கிறது; இரண்டும் முற்றும் வேறானது. 'யஹாம் ராம் தஹாம் காம் நஹீம்—எங்கு ஸ்ரீராமனுடைய நினைவுண்டோ, அங்கு காமத்திற்கிடமில்லை' என்பது இந்திப் பழமொழி.

ஒப்பிடுக: 'ந மய்யாவேசித-தியாம் காமः காமாய கல்பதே। பர்ஜிதா க்வதிதா தானாः ப்ராயோ பீஜாய நேஷ்யதே ॥'—என்னிடத்தில் சித்தத்தை வைத்தவர்களுடைய காமமானது காமமாக இருக்காது. வெறுக்கப்பட்ட விதைகளும் பக்குவம் செய்யப்பட்ட விதைகளும் முளைக்கும் சக்தியுடைய விதைகளாயிருப்பதில்லையன்றோ? —பாகவதம் 10—22—26.

காமத்திலும் காஞ்சனத்திலும் அழுந்திய மனது உலக விஷயங்களைத்தான் அறியும். இவ்வாசைகள் நீங்கிய பின்னரே மனது ஆத்ம விஷயங்களை உணரும் சக்தி உடையதாகும். —இராமகிருஷ்ணர்.

निरोधस्तु लोक-वेद-व्यापारन्यासः ॥ ८ ॥

நிரோதஸ்து லோக-வேத-வ்யாபாரந்யாஸঃ ॥ 8 ॥

(நிரோதঃ) நிரோதம் - ஒழிவு என்பது (து) எதுவெனின் (லோக-வேத-வ்யாபார-) லௌகிகமும் வைதிகமும் ஆகிய கருமங்களின் (ந்யாஸঃ) ஸந்நியாஸம் அல்லது துறவு.

ஒப்பிடுக: லோகானு-வர்த்தனம் த்யக்த்வா த்யக்த்வா தேஹானுவர்த்தனம் ।

சாஸ்த்ரானுவர்த்தனம் த்யக்த்வா ஸ்வாத்த்யாஸா-பநயம் குரு ॥

உலகைப் பின்பற்றிச் செல்லுதலையும் விட்டு விட்டு, உடலைப் பின்பற்றிச் செல்லுதலையும் விட்டுவிட்டு, நூல்களைப் பின்பற்றிச் செல்லுதலையுங்கூட விட்டொழித்து உன்னிடத்தில் பொய்யாகக் கற்பிக்கப்பட்டுள்ளதின் ஒழிவைச் செய்வாயாக. —விவேக சூடாமணி 270

எந்த மனிதன் ஆன்மாவிலேயே இன்புற்றவனாக, ஆன்மாவிலேயே திருப்தியடைந்தவனாக, ஆன்மாவிலேயே ஸந்தோஷத்தைப் பெற்றவனாக உள்ளவனோ அவனுக்குச் செய்ய வேண்டிய காரியம் ஒன்றும் இல்லை. —கீதை: 3·17.

கங்கைக் கரையிலுள்ளவன் கிணறு தேடுவானேன்? —இராமகிருஷ்ணர்

வேண்டார்கள் கன்மம் விமலனுக் காட்பட்டோர்
வேண்டார்கள் கன்மம் அதிலிச்சையற்றோர்.

—திருமந்திரம்.

तस्मिन्ननन्यता, तद्विरोधिषूदासीनता च ॥ ९ ॥

தஸ்மின்னனன்யதா தத்விரோதிஷூ-
தாஸீநதா ச ॥ 9 ॥

(தஸ்மின்) தெய்வத்தினிடம் (அனன்யதா) வேறு நாட்டம் இல்லாத பான்மை; (ச) மேலும் (தத்விரோதிஷு) அதற்கு எதிரிடையானவற்றில் (உதாஸீனதா) சிறிதும் நாட்டமின்மை—ஆகிய நிலை 'நிரோதம்' எனப் படுவது.

ஒப்பிடுக: அனன்யதா:— கேவலம் உலகப் பற்றிலேயே உழல்பவன் மலத்திற் பிறந்து அதிலேயே இறக்கும் புழுவுக்குச் சமானம். பக்தி சாதனங்களைப் பயில்வதுடன் உலக இன்பங்களையும் நாடுபவன் ஒரு சமயம் மலத்தின்மீதும் ஒரு சமயம் நல்ல பூவின்மீதும் உட்காரும் ஈக்குச் சமானம். மகான்களோ தேனைத்தவிர வேறொன்றைப் பருகாத வண்டுக்குச் சமானம்.

—இராமகிருஷ்ணர்.

உதாஸீனதா—விருப்பு வெறுப்பற்ற மனப்பான்மை. 'கடவுளை வெறுப்பவர்களை நீர் வெறுக்கிறீரா?' என்று ஒரு பக்தரை வினவியதற்கு, 'கடவுளை நேசிப்பதிலேயே என் முழு மனமும் சென்றுவிடுவதால் எவரையும் வெறுப்பதற்கு அவகாசமே இல்லை' என்றார் அந்த பக்தர்.

अन्याश्रयाणां त्यागो ऽनन्यता ॥ १० ॥

அந்யாச்ரயாணாம் த்யாகோ அனன்யதா ॥ 10 ॥

(அனன்யதா) வேறுநாட்டமில்லாத பான்மையாவது (அன்யாச்ரயாணும் த்யாகஃ) மற்ற புகலிடங்களைத் தியாகம் செய்தல்.

ஒப்பிடுக : பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு —குறள்.

ஒரு பக்தர் 'என் கண்ணுக்குள் ஆண்டவன் அழகிய ரூபத்தை வைத்தபின் வேறு ஒரு பொருளுக்கும் அங்கு இடமில்லை' என்று கூறினார்.

'உனக்குப் பணி செய்திருக்குந் தவமுடையேன் இனிப்
போய் ஒருவன் தனக்குப் பணிந்து கடைத்தலை நிற்கை
நின் சாயை யழிவு கண்டாய்.' —பெரியாழ்வார்.

'காதம் பலவுந் திரிந்துழன்றேற் கங்கோர்
நிழலில்லை நீருமில்லை உன்பாதநிழலல்லால்
மற்றோருயிர்ப்பிடம் நானெங்கும் காண்கின்றிலேன்.'
—பெரியாழ்வார்.

'உற்றாரை யான் வேண்டேன் ஊர் வேண்டேன்
பேர் வேண்டேன்' —மாணிக்கவாசகர்

लोके वेदेषु तदनुकूलाचरणं तद्विरोधिषूदासीनता ॥ ११ ॥

லோகே வேதேஷு ததனுகூலாசரணம்
தத்விரோதிஷூதாஸீநதா ॥ 11 ॥

(லோகே) உலகிலும் (வேதேஷு) வேதம் விதிக்கும் கருமங்களிலும் (தத் - அனுகூல - ஆசரணம்) அந்த பக்திக்கு அனுகூலமானவற்றைக் கைக்கொள்ளுதல்; (தத்விரோதிஷு) பிரதிகூலமானவற்றில் (உதாஸீன்தா) நாட்டமின்மை.

லோக-வேதேஷு என்பது பாடபேதம்.

ஒப்பிடுக: உடல் தாங்கியுள்ளவரைக்கும் முற்றும் கருமங்களை விடுதல் இயலாது. ஆகையால் எவன் கருமத்தின் பயனை விட்டவனோ அவனே தியாகி என்று கூறப்படுகிறான். —கீதை 18·1. 11 ||

அனுகூலமானது நித்ய கருமம்; விரோதமானது காமிய கருமம். நித்ய கருமத்தை ஈசுவரார்ப்பணமாகச் செய்ய வேண்டும். காமிய கருமத்தை விட்டுவிட வேண்டும்.

भवतु निश्चयदार्ढ्या-दूर्ध्वं शास्त्ररक्षणम् ॥ १२ ॥

பவது நிச்சயதார்ட்ட்யா-தூர்த்த்வம்
சாஸ்த்ர-ரக்ஷணம் || 12 ||

(நிச்சயதார்ட்ட்யாத் - ஊர்த்த்வம்) பக்தி நிச்சயமாக திடப்பட்டபின்னும் (சாஸ்த்ர-ரக்ஷணம்) சாஸ்திர மரியாதையைக் காப்பது எனல் (பவது) இருக்கட்டும்.

சாஸ்த்ர-ரக்ஷணம்: 'லோகஸங்க்ரஹ - மேவாபி ஸம்பச்யன் கர்த்துமர்ஹஸி.' உலகை நல்வழிப்படுத்துதலைக் கருதியும் ஈசுவரார்ப்பணமாகக் கருமத்தைச் செய்ய உரியவனாகின்றாய். —கீதை 3· 20

'ந புத்திபேதம் ஜனயேதஜ்ஞானாம் கர்மஸங்கினாம்.' கருமத்தில் பற்றுள்ள அவிவேகிகளிடம் புத்திமாறாட்டத்தை உண்டாக்கக் கூடாது. —கீதை: 3·26

अन्यथा पातित्याशंकया ॥ १३ ॥

அன்யதா பாதித்யாசங்கயா || 13 ||

(அன்யதா) அப்படி இல்லாவிடில் (பாதித்ய-ஆசங்கயா) வீழ்ச்சி ஏற்படலாம் என்ற சந்தேகத்திற்கு இடமிருப்பதால்,

பாதித்ய-சங்கயா என்பது பாடபேதம்.

இங்கு பக்தி திடப்பட்டவனைப்பற்றிப் பேசுவதால் அவனுக்கு வீழ்ச்சி ஏற்பட இடமில்லை; அவனை விழாமல் பகவான் காப்பார். ஆனால் அவனைப் பார்த்து பக்தி திடப்படாதவர்களும் கடமைகளிலிருந்து தவறக்கூடும் என்ற சந்தேகமிருப்பதால் அவர்களின் பொருட்டு சாஸ்திரத்தை ரக்ஷிக்க வேண்டும் எனக் கூறப்பட்டது.

ஒப்பிடுக: 'பெரியோன் எது எதை அனுஷ்டிக்கிறானோ அததையே ஏனைய ஜனங்களும் பின்பற்றுகின்றனர். அவன் எதை மதிப்புள்ளதாகச் செய்கிறானோ அதை உலகம் பின்பற்றுகிறது.' —கீதை: 3·21

लोकोऽपि तावदेव किन्तु भोजनादि - व्यापार - स्त्वाशरीर - धारणावधि ॥ १४ ॥

லோகோऽபி தாவதேவ கிந்து போஜனாதி-
வ்யாபார-ஸ்த்வாசரீர-தாரணாவதி | 14 |

(லோகঃ அபி) உலக வியவஹாரமும் கூட (தாவத் ஏவ) அம்மட்டே. (கிம் து) ஆனால் (போஜனாதி வ்யாபாரঃ து) சாப்பாடு முதலிய வியாபாரமோ எனில் (ஆசரீர-தாரண-அவதி) உடலைத் தரித்திருக்க வேண்டிய அளவு வரை.

அம்மட்டே :— சாஸ்திர ரக்ஷணத்தைப் போலவே பயனில் பற்றில்லாமல், 'சரீரம் ஆத்யம் கலு தர்மஸாத

ணம்.' தருமத்திற்கு முதல் ஸாதனமாக உள்ளது உடலாகையால் அது ஸாதனத்திற்கு இடையூறுகாத வகையில் பரிசுத்தமாகவும் நோயற்றதாகவும் இருக்கும்படி கவனித்துக்கொள்ள வேண்டியதவசியம். அவசியமில்லாத போகங்களை ஏற்கக்கூடாது.

ஒப்பிடுக :

உடம்பாரழியில் உயிராரழிவர்
திடம்பட மெய்ஞ்ஞானஞ் சேரவுமாட்டார்
உடம்பை வளர்க்குமுபாயமறிந்தே
உடம்பை வளர்த்தேனுயிர் வளர்த்தேனே.
உடம்பினை முன்னமிழுக் கென்றிருந்தேன்
உடம்பினுக்குள்ளே உறுபொருள் கண்டேன்
உடம்புள்ளே உத்தமன் கோயிற் கொண்டானென்று
உடம்பினை யானிருந்தோம்புகின்றேனே.

—திருமந்திரம்.

तल्लक्षणानि वाच्यन्ते नाना-मत-भेदात् ॥ १५ ॥

தல்லக்ஷணானி வாச்யந்தே நானாமத-பேதாத் ॥ 15 ॥

(மத-பேதாத்) மதக் கொள்கைகளிலுள்ள பேதங்களினால் (தத்-லக்ஷணானி) அந்த பக்தியின் அடையாளங்கள் (நானா) பலவாறாக (வாச்யந்தே) கூறப்படுகின்றன.

ஒப்பிடுக : 'யா ப்ரீதிரவிவேகானாம் விஷயேஷ்வநபாயினீ । த்வாமனுஸ்மரத: ஸா மே ஹ்ருதயான்மாऽபஸர்ப்பது ॥' அவிவேகிகளுக்கு விஷய சுகங்களில் திடமான எந்த ப்ரீதி இருக்கிறதோ அப்படிப்பட்ட ப்ரீதி உன்னைத் தொடர்ந்து தியானிக்கும் என்னுடைய இருதயத்தை விட்டு நீங்காதிருக்கட்டும்.

—பிரஹ்லாதன் : விஷ்ணுபுராணம் 1·20·19.

'மோக்ஷகாரண - ஸாமக்ர்யாம் பக்திரேவ கரீயஸீ ।
ஸ்வஸ்வரூபானு - ஸந்த்தானம் பக்திரித்யபிதீயதே ॥' — மோக்ஷத்திற்குக் காரணமாகும் ஸாதனங்களுள் பக்தியே சிறந்தது. தன்னுடைய உண்மையான ஸ்வரூபத்தைத் தொடர்ந்து சிந்தித்தலே பக்தி என்று கூறப்படுகிறது.

—சங்கரர்: விவேகசூடாமணி 31.

'எனது குணங்களைக் கேட்ட மாத்திரத்திலேயே எல்லோருடைய உள்ளத்திலும் உறைபவனாகிய என்னிடம் சமுத்திரத்தை நோக்கி கங்கை ஓடுவதுபோல் மனத்தின் ஓட்டம் இடை விடாது நிகழ்வதாயும், காரணமின்றி இயற்கையாகவும், வேறுநாட்டமில்லாததாகவும் உள்ளது உத்தம பக்தி.'

—கபில கீதை: பாகவதம்: 3·29·11-12

पूजादिष्वनुराग इति पाराशर्यः ॥ १६ ॥

பூஜாதிஷ்வனுராக இதி பாராசர்யঃ ॥ 16 ॥

(பாராசர்யঃ) பராசரமகரிஷியின் புத்திரரான வியாஸர் (பூஜா-ஆதிஷு) பூஜை முதலியவற்றில் (அனுராகঃ) ஆழ்ந்த பற்று (இதி) என்று—கூறுகிறார்.

பூஜாதிஷு — பூஜை, பாராயணம், ஜபம், ஹோமம் முதலியனவும், பஜனை, நடனம், கீதம் முதலியனவும், கோவில் கட்டுதல், குளம் வெட்டுதல், நந்தவனமமைத்தல் முதலிய பணிகளும் இதில் அடங்கும். சக்தியுள்ளவனுடைய பக்தி அவனுடைய செயல்களின் மூலம் விளங்கும்.

ஒப்பிடுக: ச்ரவணம் கீர்த்தனம் விஷ்ணோঃ ஸ்மரணம் பாதஸேவனம் ।

அர்ச்சனம் வந்தனம் தாஸ்யம் ஸக்ய - மாத்ம நிவேதனம்.

விஷ்ணுவின் சிரவணம், கீர்த்தனம், ஸ்மரணம், பாதசேவை, அர்ச்சனம், வந்தனம், பணிவிடை, நட்பு, ஆத்மநிவேதனம் (என ஒன்பது வகைப்பட்டது பக்தி.)

பிரஹ்லாதன்—பாகவதம்: 7·5·23

வியாஸர் இவ்வாறாகப் பக்தியைப் பதினெட்டுப் புராணங்களிலும் மகாபாரதத்திலும் வர்ணிக்கிறார்.

कथादिष्विति गर्गः ॥ १७ ॥

கதாதிஷ்விதி கர்க்கஃ ॥ 17 ॥

(கர்க்கஃ) கர்க்க மகரிஷி (கதா-ஆதிஷு) தெய்வீகக் கதைகளில் பற்று (இதி) என்று—கூறுகிறார்.

கர்க்கர்—யது குலத்தோரின் புரோகிதர். ஸ்ரீகிருஷ்ணனுக்கும் பலராமனுக்கும் கோகுலம் வந்து நாமகரணம் செய்வித்தவர்.

ஒப்பிடுக:—எந்த தருமம் நன்கு அனுஷ்டிக்கப்பட்டதாயினும் பகவத் கதைகளில் மனிதர்களுக்கு ஆசையை உண்டாக்காமற் போகிறதோ அது வீண் சிரமமேயாகும்.

—பாகவதம் 1.2.8

எவனுடைய சிரவணமும் கீர்த்தனமும் புண்ணியமானதோ எவன் ஸாதுக்களுக்கு நண்பனோ அந்தக் கிருஷ்ணன் தனது கதையைக் கேட்பவர்களின் இருதயத்தினுள்ளே இருந்து கொண்டு கெட்ட வாசனைகளைப் போக்கிவிடுகிறான்.

—பாகவதம் 1.2.17

வாயினுல் பாடி மனத்தினுல் சிந்திக்கப் போயபிழையும் புகுதருவான் நின்றனவும் தீயினில் தூசாகும்.

—திருப்பாவை

आत्मरत्यविरोधेनेति शाण्डिल्यः ॥ १८ ॥

ஆத்மரத்யவிரோதேனேதி சாண்டில்யঃ ॥ 18 ॥

(சாண்டில்ய:) சாண்டில்ய மகரிஷி (ஆத்மரதி - அவிரோதேன) ஆத்ம தியானத்தில் மகிழ்வதற்கு விரோதமில்லாமல்—பூஜை, கதை முதலியவற்றில் பற்று—(இதி) என்று—கூறுகிருர்.

சாண்டில்யர்:—சாண்டில்ய மகரிஷியும் நாரத பக்தி ஸூத்திரத்தைப்போல் நூறு ஸூத்திரங்கள் கொண்ட ஒரு பக்தி சாஸ்திரத்தைச் செய்திருக்கிருர். அவர் கோத்ர ப்ரவர்த்தகருமாவார். சாந்தோக்ய உபநிஷத்தில் சாண்டில்ய வித்தை என்னும் உபாஸனை கூறப்பட்டுள்ளது. அது பின்வருமாறு:—'எல்லா ருசிகளும் தானேயாகி, இவ்வுலகனைத்தையும் வியாபித்து நிற்பதாயும், வாக்கு (முதலிய இந்திரியங்கள்) இல்லாததாயும் (அடையாத ஒன்றை அடைந்ததால் உண்டாகும்) பூரிப்பு இல்லாததாயும் உள்ள அந்த பிரம்மமே என் இருதயத்தினுள் விளங்கும் எனது ஆத்மா. இச்சரீரத்தை விட்டு இந்த பிரம்மத்தையே அடைவேன். இங்ஙனம் எவனுக்கு நிச்சயம் உண்டோ அவனுக்குச் சந்தேகம் கிடையாது என்று கூறியுள்ளார் சாண்டில்யர்.'

—சா. உப. 3.14.4.

नारदस्तु तदर्पिताखिलाचारता तद्विस्मरणे परमव्याकुलतेति ॥ १९ ॥

நாரதஸ்து ததர்ப்பிதாகிலாசாரதா தத்விஸ்மரணே பரம-வ்யாகுலதேதி ॥ 19 ॥

(நாரதஃ து) நாரதரோ எனின் (தத்-அர்ப்பித-அகில ஆசாரதா) எல்லா ஆசரணைகளையும் அவனுக்கே அர்ப்பணம் செய்தலும் (தத்-விஸ்மரணே) அவனை மறந்தால், (பரம-வ்யாகுலதா) மிகுந்த கவலையும் (இதி) என்று—கூறுகிறார்.

ஒப்பிடுக:—ஸூத்திரம் 65.

ஒப்பிடுக:— தன்மனஸ்காஸ் - ததாலாபாஸ் - தத்வி சேஷ்டாஸ் ததாத்மிகாஃ। —பாக. 10.30.44

'விக்ரேது காமாகில கோபகன்யா முராரி
பாதார்ப்பித சித்தவ்ருத்திஃ ।
தத்யாதிகம் மோஹ-வசா-தவோசத்
கோவிந்த தாமோதர மாதவேதி ॥'

தயிர் முதலியவற்றை விற்க விரும்பிச் சென்ற ஒரு இடைப்பெண் கிருஷ்ணனுடைய திருவடியில் வைக்கப் பெற்ற மனோ வியாபாரத்தை உடையவளாய்த் தன் வயமிழந்து—தயிரோ பாலோ என்று கூவாமல்—'கோவிந்தா, தாமோதரா, மாதவா' என்று கூற வில்லையா? —கிருஷ்ண கர்ணாமிருதம்: 2·55

கோபிகள் உத்தவரிடத்தில் 'விஸ்மர்த்தும் நைவ சக்னுமஃ' என்றனர். எவனைத் தொடர்ந்து தியானிக்க யோகிகளும் முடியவில்லை என்கிறார்களோ அந்த பகவானை கோபிகள் மறக்க முடியவில்லை என்றனர்.

अस्त्येवमेवम् ॥ २० ॥

அஸ்த்யேவ-மேவம் ॥ 20 ॥

(ஏவம் ஏவம்) இப்படி இப்படி எல்லாம் (அஸ்தி) உளது—பக்தியின் நிலை.

இப்படி பக்தி செய்தவர்களின் சரித்திரங்கள் புராணங்களிலும் இதிஹாஸங்களிலும் எத்தனையோ கூறப்பட்டுள்ளன. இடைக்காலத்தில் தோன்றிய ஆழ்வார்களும் நாயன்மார்களும் பாண்டுரங்க பக்தர்களும் அவ்வழி நின்றவர்களே. பிற்காலத்தில் வாழ்ந்த சைதன்யர், மீராபாய், இராமகிருஷ்ண பரமஹம்ஸர் போன்றவர்களும் இந்த இலட்சியத்தையே விளக்குகின்றனர்.

यथा व्रजगोपिकानाम् ॥ २१ ॥

யதா வ்ரஜகோபிகாநும் ‖ 21 ‖

(வ்ரஜகோபிகாநும்) இடையர் குலத்துக் கோபிகைகளின்—பக்தி—(யதா) எப்படியிருந்ததோ—அவ்வாறு.

ஒப்பிடுக :—ஏவம் பக்திः ஸகலபுவனே நேக்ஷிதா ந ச்ருதா வா கிம் சாஸ்த்ரௌகைः கிமிஹ தபஸா கோபிகாப்யோ நமோஸ்து ॥

இப்படிப்பட்ட பக்தி உலகெங்கும் காணப்பட்டதுமில்லை, கேட்கப்பட்டதுமில்லை. சாஸ்திரக் குவியல்களாலாவதென்ன? தவத்தால் ஆவதென்ன? கோபிகைகளுக்கு நமஸ்காரம். —நாராயணீயம்.

அன்பினால் என்னிடம் நிலைத்த மனத்தினராம் அவர்கள் உறவினரையோ, தங்கள் உடலையோ, தூரத்திலோ சமீபத்திலோ உள்ள பொருள்களையோ, உணரவில்லை :—ஸமாதியிலாழ்ந்த முனிவர்களைப் போலும், ஸமுத்திரத்தில் பாய்ந்து நாம ரூபங்களையிழந்த நதிகளைப் போலும். —பாக. 11.12.12.

तत्रापि न माहात्म्यज्ञान—विस्मृत्यपवादः ॥ २२ ॥

தத்ராபி ந மாஹாத்ம்யஜ்ஞான- விஸ்ம்ருத்ய-
பவாதஃ ‖ 22 ‖

(தத்ர அபி) அங்குங்கூட (மாஹாத்ம்யஜ்ஞான) பகவானுடைய பெருமையின் அறிவு விஷயத்தில் (விஸ்ம்ருதி-அபவாதஃ) அவர்களுக்கு மறதி ஏற்பட்டதென்ற நிந்தை (ந) பொருத்தமாகாது.

ஒப்பிடுக :—ந கலு கோபிகா நந்தனோ பவான் அகில தேஹினு-மந்தராத்ம-த்ருக் । விகனஸார்த்திதோ விச்வ குப்தயே ஸக உதேயிவான் ஸாத்வதாம் குலே ||—நீர் யசோதையின் பிள்ளையாகிய கோபிகாநந்தனன் மட்டுமன்று. உடல்படைத்த அனைவரிடத்தும் உள்ளுறையும் ஸாக்ஷியாயிருப்பவர். தோழரே! உலகைக் காக்கும் பொருட்டு பிரம்மதேவரால் வேண்டப்பட்டு யாதவ குலத்தில் உதித்திருக்கிறீர்.—ராஸக்ரீடையில் கோபிகைகள் கூறியது.
—பாக 10. 314

ஸ்ரீ கிருஷ்ணனுடைய தெய்வீக லீலைகளை இடைவிடாது கண்டனுபவித்த கோபிகைகள் அவன் பகவான் என்பதை அறியாமலில்லை. வாயில் வையகம் கண்ட பின்னும் யசோதை தன்னைக் குழந்தையெனச் சீராட்டுவதற்காகக் கிருஷ்ணன் மாயையால் அவள் மனதைக் கவர்ந்தாற்போல் தன்னுடைய பெருமையை உணர்ந்தவர்களையும் தன்னை மனிதன் என்று கருதி நடக்கும்படி அவன் அருள்புரிந்தான்.

ஒப்பிடுக :—அறிவொன்றுமில்லாத ஆய்குலத்துந் தன்னைப் பிறவிப்பெறுந்தனைப் புண்ணியம் யாமுடையோம்.
—திருப்பாவை.

2

तद्विहीनं जाराणामिव ॥ २३ ॥

தத்விஹீனம் ஜாராணுமிவ ‖ 23 ‖

(தத்-விஹீனம்) அந்த மாஹாத்மிய ஞானமில்லாத விடத்து (ஜாராணும் இவ) கள்ளக்காதலர்களிடையே யுள்ள அன்பு போலாகிவிடும்.

கோபிகைகளுக்கு ஸ்ரீ கிருஷ்ணன் பகவான் என்ற ஞானம் இல்லாதிருக்குமேயானுல் அவர்களுடைய அன்பு கள்ளக் காதலைப்போல இழிவானதாகிவிடும். பாகவதக் கதையைச் சொன்ன சுகரோ பக்தகோடிகளோ அதை பக்திக்கு உதாரணமாகப் புகழ்ந்து கூறியிருக்கமாட்டார்கள்.

नास्त्येव तस्मिंस्तत्सुख—सुखित्वम् ॥ २४ ॥

நாஸ்த்யேவ தஸ்மிம்ஸ்-தத்ஸுக-ஸுகித்வம் ‖ 24 ‖

(தஸ்மின்) அந்த அன்பில் (தத்-ஸுக-ஸுகித்வம்) அவனுடைய சுகத்தில் சுகித்திருப்பது எனல் (நாஸ்தி ஏவ) இல்லவே இல்லை.

கள்ளக்காதலில் காதலனுடைய சுகமே தனக்குச் சுகம் என்பதில்லை. தான் இன்புற வேண்டும் என்ற எண்ணமே மேலிட்டிருக்கும். பக்தியின் லக்ஷணம் தன்னுடைய சுகத்தில் நாட்டமில்லாமல் பகவானுடைய பிரீதி ஒன்றையே நாடுவதாகும். பகவான் ஸந்தோஷமடைந்தால் அதுதான் பக்தனுக்குப் பரம சுகம்.

எவன் பகவானிடம் சென்று தனது ஆசைகளைப் பூர்த்தி செய்துகொள்ள விரும்புகிறானே அவன் பக்த

னல்லன், வியாபாரியே ஆவான் என்று பாகவதத்தில் பிரஹ்லாதர் கூறுகிறார்.

सा तु कर्म—ज्ञान—योगेभ्योप्यधिकतरा ॥ २५ ॥

ஸா து கர்ம - ஜ்ஞான - யோகேப்ப்யோ -
ப்யதிகதரா ॥ 25 ॥

(ஸா து) அந்தப் பராபக்தியோ எனின் (கர்ம - ஜ்ஞான - யோகேப்ய: அபி) கருமம், ஞானம், யோகம் ஆகியவற்றைக் காட்டிலும் (அதிகதரா) மிகச் சிறந்தது.

ஒப்பிடுக :—யோகியானவன் தவசிகளைவிட உயர்ந்தவன், ஞானிகளைவிட உயர்ந்தவன், கருமம் செய்பவர்களைவிட உயர்ந்தவன் என்பது துணிபு. ஆகையால் நீ யோகியாக ஆவாய். எவன் சிரத்தையுடையவனாக என்னிடத்திலே ஊன்றிய உள்ளத்தால் என்னைத் தொழுகின்றானோ அவன் எல்லா யோகிகளுக்குள்ளும் சிறந்தவன் என்பது என்னுடைய முடிவான அபிப்பிராயம். —கீதை 6.46 - 47.

फलरूपत्वात् ॥ २६ ॥

பல ரூபத்வாத் ॥ 26 ॥

(பல ரூபத்வாத்)— அது கருமம் ஞானம் யோகம் ஆகியவற்றின்—பயன் வடிவாயிருத்தலால்.

மற்ற ஸாதனங்கள் அரும்பு மலர் காய் போன்றவை, பக்தி பழம் போன்றது. பக்தி செய்து அதற்கப்பால் வேறொன்றை அடைய வேண்டியதில்லை. பக்திக்குப்

பயன் பக்தியே. அந்த இன்ப நிலையை எய்தியவன் அதை விட்டு வேறொன்றையும் நாடமாட்டான்.

ஒப்பிடுக :—பக்திः பரேசானுபவோ விரக்தி-ரன்யத்ர சைஷ த்ரிக ஏககாலः ।

ப்ரபத்யமானஸ்ய யதாச்னதः ஸ்யுஸ் - துஷ்டிः புஷ்டிः க்ஷுதபாயோனுகாஸம் ॥

சாப்பிடுபவனுக்கு ஒவ்வொரு கவளத்திலும் திருப்தியும் புஷ்டியும் பசி நீங்குதலும் ஏற்படுவதுபோல் பகவானைப் பஜிப்பவனுக்குப் பக்தியும் ஈசுவரானுபவமும் வைராக்கியமும் ஆகிய இம்மூன்றும் ஒரே சமயத்திலுண்டாகும். —பாகவதம் 11.2.42

அறிவு வேறு, அனுபவம் வேறு; பக்தி அனுபவரூபம்.

ईश्वरस्याप्यभिमान—द्वेषित्वाद्—दैन्यप्रियत्वाच्च ॥ २७ ॥

ஈச்வரஸ்யாப் - யபிமான - த்வேஷித்வாத் -
தைன்ய – ப்ரியத்வாச்ச ‖ 27 ‖

(ஈச்வரஸ்ய அபி) ஈசுவரனுக்குங்கூட (அபிமான - த்வேஷித்வாத்) தற்பெருமை பிடிக்காததாலும் (தைன்ய ப்ரியத்வாச்) எளிமை பிரியமாயிருப்பதாலும்—வேறு நாட்டமில்லாத பக்தி சிறந்ததாகும்.

ஈச்வரஸ்யாப் - யபிமானி த்வேஷித்வாத் — பாடபேதம்.

ஈசுவரனுக்குத் தற்பெருமை பிடிக்காததால் பக்தன் அகங்காரமற்றவனா யிருக்க வேண்டும். 'திருணாதபி

ஸூ்நீசேன தரோரபி ஸஹிஷ்ணுதா । அமானினா மானதேன கீர்த்தனீயஃ ஸதா ஹரிஃ ॥' துரும்பைவிடத் தன்னைத் தாழ்ந்தவனாகவும், வெட்டினாலும் நிழல் தரும் மரத்தைப்போல் பொறுமையுடையவனாகவும், அகங்காரமற்றுப் பிறரை வெகுமானப் படுத்துபவனாகவும் இருந்துகொண்டு எப்பொழுதும் ஹரி நாமத்தைக் கீர்த்தனம் செய்ய வேண்டும் என்பது சைதன்ய மகாப்ரபுவின் உபதேசம்.

तस्याः ज्ञानमेव साधन–मित्येके ॥ २८ ॥

தஸ்யாஃ ஜ்ஞானமேவ ஸாதன-மித்யேகே ॥ 28 ॥

(தஸ்யாஃ) அந்த பக்திக்கு (ஜ்ஞானம் ஏவ) ஞானமே (ஸாதனம்) பொருத்தமான வழி (இதி) என்று (ஏகே) சிலர்—கருதுகின்றனர்.

ஞானம் ஸாதனம் என்பதை நாரதர் மறுக்கவில்லை. ஞானம் ஒன்றேதான் ஸாதனம் என்பதை அவர் ஒப்புக்கொள்ளவில்லை.

ஒப்பிடுக:—'சிலர் தியானத்தால் உள்ளத்தில் ஆத்மாவைக் காண்கின்றனர்; வேறு சிலர் ஸாங்கிய யோகத்தாலும், மற்றும் சிலர் கரும யோகத்தாலும் காண்கின்றனர். இன்னும் சிலர் இவ்வாறு உணராதவர்களாயினும் பிறரிடமிருந்து உபதேசம் பெற்று உபாஸிக்கின்றனர்; அவர்களுங்கூட உபதேசத்தையே உயர்கதியாய்க் கொண்டவர்களாய் ஸம்ஸாரத்தை நிச்சயமாய்க் கடக்கின்றனர்.' —கீதை: 13.24-25.

'எவர்கள் எவ்வாறு என்னை நாடுகின்றார்களோ அவர்களை அவ்வாறே நான் அனுக்கிரகிக்கிறேன்.'

—கீதை: 4.11

अन्योन्याश्रयत्व—मित्यन्ये ॥ २९ ॥

அன்யோன்யாச்ரயத்வ - மித்யன்யே | 29 |

(அன்யோன்ய - ஆச்ரயத்வம்) ஒன்றையொன்று சார்ந்திருப்பது (இதி) என்று (அன்யே) பிறர் கருதுகின்றனர்.

ஞானத்தால் பக்தி யுண்டாகும்; பக்தியினால் ஞானம் வளரும்; இப்படிப் படிப்படியாக ஸாதகன் உயர்வெய்தி உத்தம நிலையை யடைவான்.

ஒப்பிடுக:— 'நான் எவன் என்றும் எத்தன்மையோன் என்றும் என்னை ஒருவன் பக்தியினால் உண்மையில் உணர்கிறான். அதன்பின் உள்ளபடி என்னையறிந்த அவன் விரைவில் என்னிடம் புகுகிறான்.'

—கீதை: 18.55

முன்னம் அவனுடைய நாமம் கேட்டாள்
மூர்த்தி அவனிருக்கும் வண்ணங் கேட்டாள்
பின்னும் அவனுடைய ஆரூர் கேட்டாள்
பெயர்த்தும் அவனுக்கே பிச்சியானாள்;
அன்னையும் அத்தனையும் அன்றே நீத்தாள்
அகன்றாள் அகலிடத்தே ஆசாரத்தை
தன்னை மறந்தாள் தன் நாமங் கெட்டாள்
தலைப்பட்டாள் நங்கை தலைவன் றாளே. —அப்பர்.

स्वयं फलरूपतेति ब्रह्मकुमारः ॥ ३० ॥

ஸ்வயம் பலரூபதேதி ப்ரஹ்ம குமாரஃ ॥ 30 ॥

(ஸ்வயம்) தனக்குத் தானாகவே — பக்தியானது — வேறொரு உதவியையும் வேண்டாமல் (பலரூபதா) பயன் வடிவாக உளது (இதி) என்று (ப்ரஹ்ம குமாரஃ) பிரம்ம குமாரரான நாரதர்—கருதுகிறார்.

'ப்ரஹ்ம குமாரஃ'ஃ—ப்ரஹ்ம குமாராஃ பிரம்ம குமாரர்களான ஸநகர், ஸநந்தனர், ஸநத் குமாரர், ஸநத்ஸுஜாதர், நாரதர் ஆகிய எல்லோரும் என்பது பாடபேதம்.

பக்தியே உபாயமும் உபேயமும்; அதுவே ஸாதனமாகவும் ஸாதனத்தின் பயனாகவும் உளது; பக்தியைச் செய்து அதனால் அடைய வேண்டிய வேறொன்றுமில்லை. அவ்வின்பத்தில் எல்லா இன்பமும் அடங்கும்.

ஒப்பிடுக:—'இவற்றைப் பறை கொள் வானன்றுகாண் கோவிந்தா

எற்றைக்கு மேழேழு பிறவிக்கு முந்தன்னோடு
உற்றோமே யாவோம் உனக்கே நாமாட் செய்வோம்
மற்றை நங்காமங்கள் மாற்றேலோ ரெம்பாவாய். —திருப்பாவை.

राजगृह - भोजनादिषु तथैव दृष्टत्वात् ॥ ३१ ॥

ராஜக்ருஹ - போஜனாதிஷு ததைவ த்ருஷ்டத்வாத் ॥ 31 ॥

(ராஜக்ருஹ -) அரண்மனை (போஜனுதிஷு) சாப்பாடு முதலியவை ஆகிய விஷயங்களில் (ததா ஏவ) அவ்வாறே (த்ருஷ்டத்வாத்) காணப்படுவதால்.

அதாவது அரண்மனை போன்ற அழகிய வீடானாலும், நல்ல சாப்பாடானாலும் அவற்றை பற்றிய அறிவினால் மட்டும் அதிகப் பயனில்லை, அனுபவத்தால் தான் முழுப் பயனும் திருப்தியும். அவ்வாறே பக்தியும் 'ஸ்வயம் பலரூபதா' பயன் வடிவாக உளது.

न तेन राजपरितोषः क्षुधाशान्तिर्वा ॥ ३२ ॥

ந தேந ராஜபரிதோஷஃ க்ஷுதா சாந்திர்வா ॥32॥

(தேன) அரண்மனை இருக்கிறது என்ற அறிவினால் மட்டும் (ந ராஜபரிதோஷஃ) அரசனுக்குப் பூர்ண திருப்தி ஏற்படாது; (வா) அல்லது (க்ஷுதா சாந்திஃ) பசி தீருதலும் சாப்பாட்டின் அறிவினால் மட்டும் ஏற்பட்டுவிடாது.

க்ஷுச்சாந்திர்வா—பாட பேதம்.

तस्मात् सैवग्राह्या मुमुक्षुभिः ॥ ३३ ॥

தஸ்மாத் ஸைவ க்ராஹ்யா முமுக்ஷுபிஃ ॥ 33 ॥

(தஸ்மாத்) ஆகையால் (முமுக்ஷுபிஃ) முக்தியை விரும்புபவர்களால் (ஸா ஏவ) அந்த பக்தி ஒன்றே (க்ராஹ்யா) கைகொள்ளத் தகுந்தது.

ஒப்பிடுக :— 'நான்யா ஸ்ப்ருஹா ரகுபதே ஹ்ருதயேऽஸ்மதீயே ஸத்யம் வதாமி ச பவானகிலாந்தராத்மா,

பக்திம் ப்ரயச்ச ரகுபுங்கவ நிர்ப்பராம் மே காமாதி 'தோஷரஹிதம் குரு மானஸஞ்ச ||' ரகுகுல நாயகனே! என்னுடைய உள்ளத்தில் வேறு ஆசையில்லை, உண்மையே கூறுகின்றேன். நீ அனைவருள்ளத்தும் உறையும் அந்தராத்மா, ரகுகுல சிரேஷ்டனே! உன்னைச் சரணடைந்து என் பாரத்தை நீக்கிக்கொள்ளும்படியான பக்தியை எனக்குக் கொடுத்தருள்வாய் மனதைக் காமம் முதலிய தோஷம் அற்றதாகவும் செய்தருள்வாய். —ராமசரித மானஸம்: துளஸிதாஸர்.

तस्याः साधनानि गायन्त्याचार्याः || ३४ ||

தஸ்யாः ஸாதனானி காயந்த்யாசார்யாः || 34 ||

(தஸ்யாः) அதற்கு (ஸாதனானி) வழிகளை (ஆசார்யாः) குருமார்கள் (காயந்தி) கீர்த்தனம் செய்துள்ளார். நாரதர் இதுவரை பக்தியின் லக்ஷணங்களைக் கூறி இனி ஸாதனங்களைக் கூறுமிடத்துக் கொள்ள வேண்டியவைகளையும் தள்ளவேண்டியவைகளையும் வகுத்துக் கூறுகிறார். அவற்றுள்ளும் ஆடவர், மகளிர், பாமரர், பண்டிதர், உயர் குலத்தோர், தாழ் குலத்தோர் என்ற வித்தியாசமின்றி எல்லோருக்கும் பொதுவாயுள்ள வழிகளையே முக்கியமாய்க் குறிப்பிடுகிறார்.

ஆசார்யாः—பக்திக்கு ஆசார்யர்கள், ஸநத்குமாரர், வேதவியாஸர், சுகர், சாண்டில்யர், கர்க்கர், விஷ்ணு ரிஷி, கௌண்டின்யர், ஆதிசேஷர், உத்தவர், ஆருணி, பலி சக்ரவர்த்தி, ஹனுமார், விபீஷணர் முதலியோர் என்று நாரதர் 83வது சூத்திரத்தில் கூறுகிறார். இவர்

களில் தேவர், மனிதர், அசுரர், ராக்ஷஸர், வானரர் எல்லா வகையினரும் உளர்.

तत्तु विषयत्यागात् संगत्यागाच्च ॥ ३५ ॥

தத்து விஷயத்யாகாத் ஸங்கத்யாகாச்ச ‖ 35 ‖

(தத்து) அது எங்ஙனமெனின், (விஷயத்யாகாத்) வெளி விஷயங்களில் நாட்டத்தைத் துறத்தலாலும் (ஸங்கத்யாகாத் ச) பற்றைவிடுதலாலும்.

விஷயத்யாகாத் - விஷயமாவது இந்திரியங்களைக் கவரும் சப்த—ஸ்பர்ச—ரூப—ரஸ-கந்தம் எனும் ஐந்தின் கூட்டம்.

ஒப்பிடுக. - மோக்ஷஸ்ய காங்க்ஷா யதி வை தவாஸ்தி த்யஜாதிதூராத் - விஷயான் விஷம் யதா । பீயூஷவத் - தோஷ - தயா - க்ஷமார்ஜவ - ப்ரசாந்தி - தாந்தீர் - பஜ நித்ய - மாதராத் ॥ முக்தியில் விருப்பம் உனக்கு இருக்குமேயானால் விஷயங்களை விஷத்தைப்போல் வெகு தூரத்தில் ஒதுக்கித் தள்ளிவிடு. அமிருதத்தைப்போல் திருப்தி, இரக்கம், பொறுமை, நேர்மை, மனவமைதி, புலனடக்கம் ஆகியவற்றை எப்பொழுதும் பரிவுடன் கைக்கொள்வாயாக. —விவேக சூடாமணி : 82

விலக்க வேண்டியதை முதலில் விலக்கினால்தான் ஒருவன் கொள்ள வேண்டியதில் புத்தியை அடைவான். —ஸூதஸம்ஹிதை.

விலக்கவேண்டியதை ஸ்ரீ ராமகிருஷ்ணர் 'காமினி காஞ்சனம்' என்ற இரு சொற்களில் அடக்கிக் கூறுவார்.

ஸங்கத்யாகாத் - விஷயத்தை விடுவதுடன், மனதிற்கு அதிலுள்ள தொடர்பையும் விடவேண்டும்.

अव्यावृत - भजनात् ॥ ३६ ॥

அவ்யாவ்ருத—பஜனாத் I 36 I

(அவ்யாவ்ருத—) இடைவிடாத (பஜனாத்) பஜனை அதாவது தியானம் ஜபம் பூஜை முதலிய வடிவு கொண்ட பகவத் ஸேவையால்.

ஓடும் ஆற்றில் அணைகட்டுவதுபோல் விஷயத் தியாகத்தாலும், ஸங்கத் தியாகத்தாலும், வீணாகப் பாயும் மனோசக்தி சேமிக்கப்படும். அணை நீரைக் கால்வாயில் கொண்டுபோய்ப் பயிர்களுக்குப் பாய்ச்சுவதுபோல் தியானம் ஜபம் பூஜை முதலியவை. அவற்றால் பக்திப் பயிர் வளரும்.

அவ்யாவ்ருத.—ஒப்பிடுக —' நித்ராயா லோகவார்த்தாயா: சப்தாதேரபி விஸ்ம்ருதே: । க்வசிந் நாவஸரம் தத்வா சிந்தயாத்மான - மாத்மனி ' உறக்கத்திலிருந்தும் உலக வியாபாரத்திலிருந்தும் சப்தம் முதலிய விஷயங்களிலிருந்தும் ஏற்படக்கூடிய ஆத்ம மறதிக்குச் சிறிதும் அவகாசம் கொடுக்காமல் உண்மையான ஆத்மஸ்வரூபத்தை புத்தியில் சிந்திப்பாயாக.

—விவேக சூடாமணி 286.

' ஸ து தீர்க்க கால - நைரந்தர்ய - ஸத்காரா ஸேவிதோ த்ருடபூமி:' -நீண்டகாலம் இடையறாமல் உரிய சாதனங்களுடன் அப்பியாஸம் நிகழுமாகில் அது திடமானதாகும். —யோகசூத்திரம் 1.14

लोकेऽपि भगवद्गुण - श्रवण - कीर्तनात् ॥ ३७ ॥

லோகேऽபி பகவத்குண-ச்ரவண—
கீர்த்தனாத் ‖ 37 ‖

(லோகே அபி) உலகில் பிறருடன் பழகும் பொழுதும் (பகவத்குண - ச்ரவண - கீர்த்தனாத்) பகவானுடைய குணங்களைக் கேட்டல், வாயினால் பாடுதல் ஆகிய வற்றால்.

ஒப்பிடுக. – 'சக்ராயுதாய நாமாவளி ஸர்வதா பரி கீர்த்தயேத் । நாசௌசம் கீர்த்தனே தஸ்ய பவித்ரோ பகவான் ஹரி: ॥' பகவான் சக்ரபாணியின் நாமங்களை எப்பொழுதும் கீர்த்தனம் செய்யவேண்டும். அந்த கீர்த் தனத்திற்கு உடலின் சுத்தத்தைப்பற்றிக் கூட கவனிக்க வேண்டியதில்லை. பகவந் நாமமே ஒருவனைப் பரிசுத்த மாக்கி விடுகிறதென்பது கருத்து. —தக்ஷஸ்ம்ருதி

'அபவித்ர: பவித்ரோ வா ஸர்வாவஸத்தாம்
கதோऽபி வா ।
ய: ஸ்மரேத் புண்டரீகாக்ஷம் ஸ பாஹ்யாப்
ப்யந்தர: சுசி: ॥'

அசுத்தமாகவாயினும் சுத்தமாகவாயினும் எந்த நிலையிலிருந்தாலும் எவனொருவன் தாமரைக் கண்ணனை நினைக்கிறானோ அவன் உள்ளும்புறம்பும் சுத்தமானவனே.

'தஸ்மாத் ஸர்வேஷு காலேஷு மாமனுஸ்மர யுத்த்ய ச' ஆகையால் எல்லாக் காலங்களிலும் என்னை நினை. போரும் புரி. —கீதை 8.7

நீ கிருஹஸ்தனாக இருந்தாலும் உலகப்பற்று விடா தவனாக இருந்தாலும் உனது சித்தம்மட்டும் பகவானை

நாடிக்கொண்டே இருக்கவேண்டும். ஒரு கையால் உனது உலகவேலையைச் செய்தாலும் மற்றொரு கையால் பகவானுடைய பாதங்களைத் தொட்டுக்கொண்டிரு. வேலை ஒன்றும் இல்லாதபோது அவருடைய பாதங்களை இரு கைகளாலும் சேரப்பிடித்து உன் மார்போடு அணைத்துக்கொள். —ஸ்ரீ ராமகிருஷ்ணர்

मुख्यतस्तु महत्कृपयैव भगवत्कृपालेशाद्वा ॥ ३८ ॥

முக்க்யதஸ்து மஹத்க்ருபயைவ
பகவத்க்ருபா-லேசா த்வா ॥ 38 ॥

(முக்க்யத : து) முக்கியமாக எதனால் எனின், (மஹத் க்ருபயா ஏவ) மகான்களுடைய கிருபையாலேயே; (பக-வத் - கிருபா - லேசாத் - வா) அல்லது ஒரு சிறிதள வேனும் பகவத் கிருபையால்.

ஒப்பிடுக.—'ஸத்ஸங்கத்வே நிஸ்ஸங்கத்வம் நிஸ்ஸங்கத்வே நிர்மோஹத்வம் । நிர்மோஹத்வே நிச்சலதத்வம் நிச்சலதத்வே ஜீவன் முக்திঃ ॥' ஸாது ஸங்கத்தால் பற்றின்மை ஏற்படும்; பற்றின்மையால் மோஹம் நீங்கும்; மோஹம் நீங்கினால் திடமான தத்வஞானம் உண்டாகும்; தத்வஞானத்தால் ஜீவன்முக்தி.

—பஜகோவிந்தம்.

நாரதர் வியாஸருக்குத் தமது சுய சரிதையைக் கூறுகையில் முந்திய கல்பத்தில் தான் ஒரு சாதுர்மாஸ்ய காலத்தில் ஸாதுக்களுக்குப் பணிவிடை செய்ததையும் அதனால் அவர்களுடைய கிருபைக்குப் பாத்திரமாகி அடுத்த பிறவியில் தேவரிஷியானதையும் குறிப்பிட்டுள்ளார். —பாகவதம் 1.5—6.

'மஹத்ஸேவாம் த்வாரமாஹுர் — விமுக்தேஸ்— தமோத்வாரம் யோஷிதாம் ஸங்கிஸங்கம் !' மஹான்களின் ஸேவையை மோக்ஷவாயில் என்றும், ஸ்த்ரீஸங்கிகளின் ஸங்கத்தை அஞ்ஞானவாயில் என்றும் கூறுகின்றனர். —பாகவதம் 5.5.2

महत्संगस्तु दुर्लभोऽगम्योऽमोघश्च ॥ ३९ ॥

மஹத்ஸங்கஸ்து துர்லபோऽகம்யோऽ
மோகச்ச ॥ 39 ॥

(மஹத் ஸங்கஃ து) மகான்களுடைய ஸங்கம் அல்லது கூட்டுறவோ எனின், (துர்லபஃ) அடைதற்கரிது (அகம்யஃ) தேடிச் செல்லுதற்கரிது (அமோகஃ ச) ஒருக்காலும் வீண் போகாதது.

ஒப்பிடுக.—'அரியவற்றுளெல்லாம் அரிதே பெரியாரைப் பேணித் தமராக்கொளல்.' —திருக்குறள்

'துர்லபம் த்ரயமேவைதத் - தேவானுக்ரஹ-
ஹேதுகம் ।
மனுஷ்யத்வம் முமுக்ஷுத்வம் மஹா
புருஷஸம்ச்ரயஃ ॥'

மனிதப்பிறவி, முக்தியில் ஆசை, மகா புருஷர்களை நாடியடைதல் ஆகிய இம் மூன்றும் அடைதற்கரிது ; தெய்வத்தின் அருள் காரணமாகத்தான் அடைய இயலும். —விவேக சூடாமணி 3

लभ्यतेऽपि तत्कृपयैव ॥ ४० ॥

லப்யதேऽபி தத்க்ருபயைவ ॥ 40 ॥

(அபி) எனினும் (தத்க்ருபயா ஏவ) பகவத் கிருபை யாலேயே.

ஒருவருக்கு ஸத்ஸங்கமும் ஸத்குருவும் கிடைப்பது பகவத் கிருபையாலேயே.

ஒப்பிடுக.—'மூர்த்தி தலந் தீர்த்தம் முறையால் தொடங்கினர்க்கோர் வார்த்தை சொலச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே.' —தாயுமானவர்

'அடியேன் உன் அடியார் நடுவுள்ளிருக்கும் அருளைப் புரிவாய்! பொன்னம்பலத்தெம் முடியாமுதலே! என் கருத்து முடியும் வண்ணம் முன்நின்றே,'

—மாணிக்கவாசகர்

तस्मिंस्तज्जने भेदाभावात् ॥ ४१ ॥

தஸ்மிம்ஸ்தஜ்ஜனே பேதாபாவாத் ‖41‖

(தஸ்மின்) அவனிடத்தும் - அதாவது பகவானிடத்தும் - (தத்ஜனே) அவனுடைய ஜனங்களாகிய மனிதர்களிடத்தும் (பேத அபாவாத்) வேற்றுமையின்மையால்.

வேற்றுமை இன்மையால்: வேற்றுமையின்றி எல்லா ஜீவராசிகளிடமும் பகவானும் பக்தர்களும் அன்பு செய்தவர்களாதலால்; அல்லது பகவானுக்கும் உத்தம பக்தனுக்கும் வேற்றுமையின்மையால்

ஒப்பிடுக.—'ஜ்ஞானீ து ஆத்மைவ மே மதம்'— ஞானியானவன் நானே என்பது என் கொள்கை.

கீதை 7. 18

तदेव साध्यतां तदेव साध्यताम् ॥ ४२ ॥

ததேவ ஸாத்த்யதாம் ததேவ ஸாத்த்யதாம் ‖42‖

(தத் ஏவ) அதுவே (ஸாத்யதாம்) சாதிக்கப்படட்டும், (தத் ஏவ ஸாத்யதாம்) அதுவே சாதிக்கப் படட்டும்.

அதுவே சாதிக்கப்படட்டும்.—அதாவது வெளி விஷயங்களில் நாட்டத்தைத் துறத்தல், பற்றை விடுதல், இடைவிடாத பஜனை, பிறருடன் பழகும் பொழுதும் பகவானுடைய குணங்களைப் பற்றிப் பேசுவதும், கேட்பதும், முக்கியமாக மகான்களுடைய கிருபை ஆகியவை. மனதின் பண்பு இவ்வாறு மாறினல் இயற்கை முழுதும் அந்த ஸாதகனுக்கு உதவி புரியும். ஸ்ரீமத் பாகவதத்தில் அவதூதர் ஒருவர் தனக்கு பூமியும் காற்றும் ஆகாயமும் ஜலமும் அக்கினியும் சந்திரனும் சூரியனும் யானையும் மீனும் குழந்தையும் குமரியும் எப்படி குருவானர்கள் என்பதைக் கூறுகிறார்.

दुःसंगस्सर्वथैव त्याज्यः ॥ ४३ ॥

துஃ ஸங்கஸ்ஸர்வதைவ த்யாஜ்யஃ ॥ 43 ॥

(துஃ ஸங்கஃ) கெட்டவர்களின் கூட்டுறவு (ஸர்வதா) எவ்வாற்றானும் (த்யாஜ்யஃ ஏவ) ஒதுக்கப்படவே வேண்டும்.

ஒப்பிடுக.—கடவுள் எல்லா இடங்களிலும் இருக்கிறார் என்பது உண்மையாயினும், எல்லா இடங்களும் ஸாதகன் செல்லத் தகுதியுடையனவாகா. ஒரு வகை நீர் கால் கழுவப் பயன்படும், ஒன்று முகம் கழுவப் பயன்படும், ஒன்று குடிக்கப் பயன்படும்; சிலவகை நீர் தொடுவதற்குக்கூடத் தகாது. —ஸ்ரீ ராமகிருஷ்ணர்.

கெட்டவன் ஒருவன் எப்படி கெட்டான் என்று பார்த்தால் அதற்கு ஆரம்பம் கெட்ட சேர்க்கை என்பது தெரியும்.

'தீயாரைக் காண்பதுவும் தீதே.'

'ஆத்மாவிற்கு நாசம் விளைக்கும் நரகவாயில் மூவகைத்து; காமம் கோபம் லோபம் என்பன; ஆகையால் இம் மூன்றையும் தள்ள வேண்டும்.'

—கீதை 16.21

இம் மூன்று குற்றங்களுக்காளானவர்களுடன் ஒருக்காலும் ஸாதகன் சேரக்கூடாது

काम - क्रोध - मोह स्मृतिभ्रंश - बुद्धिनाश - सर्वनाश - कारणत्वात् ॥

காமக்ரோத - மோஹ - ஸ்ம்ருதிப்ப்ரம்ச -
புத்திநாச - ஸர்வநாச - காரணத்வாத் ॥ 44 ॥

(காம—) காம எழுச்சி (க்ரோத—) கோப எழுச்சி (மோஹ—) மதிமயக்கம் (ஸ்ம்ருதிப்ப்ரம்ச—) நல்நினைவின் கேடு (புத்திநாச—) புத்தியின் கேடு—இவ்வாறாக—(ஸர்வநாச—காரணத்வாத்) எல்லாவகை அழிவிற்கும் காரணமாவதால்

ஒப்பிடுக:—மனதானது கடவுளாகிய குறிக்கோளினின்று சிறிதளவு நழுவி வெளிநோக்குடையதானாலும் கூடப் படிப்படியாய் வீழ்ச்சியடைவதாகும்; கவனக்குறைவால் மாடிப்படிகளில் நழுவிய ஒரு விளையாட்டுப் பந்து எப்படி உருண்டு கீழ் ஓடிவிடுமோ அப்படி.

—விவேக சூடாமணிः 325

புத்திநாசः—விஷயங்களை தியானிக்கும் புருஷனுக்கு அவற்றிடம் பற்று உண்டாகிறது; பற்றினின்று ஆசை;

ஆசையினின்று கோபம்; கோபத்தினின்று மதிமயக்கம்; மதிமயக்கத்தினின்று நன்னினைவின் கேடு; நன்னினைவு கெடுவதால் புத்தி நாசம் ஏற்படுகிறது; புத்திநாசத்தால் முற்றும் அழிகிறான். —கீதை 2.62—63

तरंगायिता अपीमे संगात्समुद्रायन्ति ॥ ४५ ॥

தரங்காயிதா அபீமே ஸங்காத்
ஸமுத்ராயந்தி ॥ 45 ॥

(இமே) இவை (தரங்காயிதாः அபி) அலைகளைப் போலிருப்பினும் (ஸங்காத்) ஒன்று கூடிச் சேருவதால் (ஸமுத்ராயந்தி) சமுத்திரத்தைப் போல் ஆகிவிடுகின்றன.

ஸமுத்ராயந்தே—பாட பேதம்.

கெட்ட கூட்டுறவால் காமம், குரோதம், லோபம் முதலியவை ஆரம்பத்தில் சிறு அலைகளைப் போல் எழும். அவைகளை கவனிக்காமல் விட்டால் நாளடைவில் ஸமுத்திரம் போல் வளர்ந்துவிடும்.

ஒப்பிடுகः— ஆகையால் முதலில் இந்திரியங்களை வசப்படுத்திக் கொண்டு அறிவையும் அனுபூதியையும் நாசம் செய்வதும் பாவத்தில் சேர்ப்பதுமாகிய இந்த சத்துருவை ஒழிக்க வேண்டும். —கீதை 3.41

ஆழமுள்ள கிணற்றின் விளிம்பில் நிற்பவன் அதனுள் விழுந்து விடாமலிருப்பதற்காக ஜாக்கிரதையாக இருப்பதைப் போல் உலகத்தின் ஆசாபாசங்களில் விழாமல் ஜாக்கிரதையாயிருக்கவேண்டும். விழுந்துவிட்டால் காயப்படாமலும் அழுக்குப் படாமலும் வெளிவருவது அசாத்தியம். —ஸ்ரீராமகிருஷ்ணர்

कस्तरति कस्तरति मायाम्? यः संगांस्त्यजति, यो महानुभावं सेवते, निर्ममो भवति ॥ ४६ ॥

கஸ்தரதி கஸ்தரதி மாயாம்? யஃ ஸங்காம்ஸ்த்யஜதி, யோ மஹானுபாவம் ஸேவதே, நிர்மமோ பவதி ॥ 46 ॥

(கஃ) எவன் (தரதி) தாண்டுகிறான்? (மாயாம்) மாயையை (கஃ) எவன் (தரதி) தாண்டுகிறான்? (யஃ) எவன் (ஸங்கான்) ஸங்கங்களை (த்யஜதி) விடுகிறானோ, (யஃ) எவன் (மஹானுபாவம்) மகிமை மிக்க ஞானவானை (ஸேவதே) சேவிக்கிறானோ, (நிர்மமஃ) மமகாரமற்றவனாக (பவதி) ஆகிறானோ - அவன் மாயையைத் தாண்டுகிறான்.

ய: ஸங்கம் த்யஜதி;—பாட பேதம்.

ஒப்பிடுக:- மகான்களின் சேவையை மோக்ஷவாயில் என்றும் கூறுவர். எவர்கள் ஸம சித்தர்களும், சாந்தமானவர்களும், கோபமற்றவர்களும், எல்லோரையும் நேசிப்பவர்களும் நல்லொழுக்க முடையவர்களுமாக உள்ளவர்களோ அவர்களே மகான்கள்.

—பாகவதம் 5.5.2

மாயை :—' முக்குண வடிவானது மாயை. அது தெய்வ சக்தி வாய்ந்தது. தாண்டுதற்கரியது ; எவர்கள் என்னைச் சரணமடைகின்றார்களோ அவர்கள் இந்த மாயையைத் தாண்டுகிறார்கள்' என்று பகவான் கூறுகிறார்.

—கீதை 7.14

यो विविक्तस्थानं सेवते, यो लोकबन्धन - मुन्मूलयति, निस्त्रैगुण्यो भवति, योगक्षेमं त्यजति ॥ ४७ ॥

யோ விவிக்தஸ்த்தானம் ஸேவதே, யோ லோகபந்தன - முன்மூலயதி, நிஸ்த்ரைகுண்யோ பவதி, யோக - க்ஷேமம் த்யஜதி ‖ 47 ‖

(ய:) எவன் (விவிக்தஸ்த்தானம்) தனிமையான இடத்தை (ஸேவதே) நாடுகிறானோ (ய:) எவன் (லோக - பந்தனம்) உலகத்தளையை (உன்மூலயதி) வேரறுக்கிறானோ (நிஸ்த்ரைகுண்ய:) முக்குணங்களைக் கடந்தவனாக (பவதி) ஆகிறானோ (யோகக்ஷேமம்) பொருளீட்டுதலையும் சேமித்தலையும் (த்யஜதி) விட்டொழிக்கிறானோ- அவன் மாயையைத் தாண்டுகிறான்.

தனிமையான இடம்:—ஒருவரும் வராத மூலையிலோ, காட்டில் தன்னந்தனியனாகவோ, உனது மனமாகிய நிச்சப்தமான கோவிலிலோ ஈச்வரனைப்பற்றிச் சிந்தனை செய். —ஸ்ரீ ராமகிருஷ்ணர்

உலகத்தளை:—வேதங்கள் (கர்மகாண்டம்) முக்குணங்களைப் பற்றியவை. முக்குணங்களைக் கடந்தவனாய், இருமைகளை ஜயித்தவனாய் நிலைபெற்ற மனதுடையவனாய், பொருளை ஈட்டுதலிலும் போற்றுதலிலும் அலையாத மனத்தினனாய் உடல் நாட்டம் விட்டு உள் நாட்டம் உடையவனாய் இரு. —கீதை 2.45

यः कर्मफलं त्यजति, कर्माणि संन्यस्यति, ततो निर्द्वन्द्वो भवति ॥ ४८

யஃ கர்மபலம் த்யஜதி, கர்மாணி ஸந்ந்யஸ்யதி, ததோ நிர்த்வந்த்வோ பவதி ‖ 48 ‖

(யஃ) எவன் (கர்மபலம்) கருமத்தின் பயனை (த்யஜதி) தியாகம் செய்கிறானோ (கர்மாணி) கருமங்களை (ஸந்ந்யஸ்யதி) முற்றுந் துறக்கின்றானோ (தத:) அதனால் (நிர்-த்வந்த்வ:) இரட்டைகளைக் கடந்தவனாக (பவதி) ஆகின்றானோ அவன் மாயையைத் தாண்டுகிறான்.

ஸாதகன் ஆரம்ப நிலையில் உலக வாழ்க்கையில் அகங்கார மமகாரமின்றி ஈசுவரார்ப்பணமாக மட்டும் தனக்கென ஒரு பயனையும் இச்சியாமல் கருமம் புரிய வேண்டும். முதிர்ச்சி யடைந்த பின் கருமங்களையும் கூடியவரை தியாகம் செய்யவேண்டும். இந்த நிலையை பகவத் கீதை பின் வருமாறு வர்ணிக்கிறது. 'எதையும் வேண்டாதவனாய்ப் பரிசுத்தனாய்த் திறமையுடையவனாய் ஒரு பக்ஷத்தைச் சாராதவனாய், மனத்துயரமொழிந்தவனாய் எல்லாக் கருமங்களையும் துறந்தவனாய் எவன் எனது பக்தனாய் உள்ளவனோ அவன் எனக்குப் பிரியமானவன்' (12.16). ஆசையால் தூண்டப்பட்டு ஒரு கருமத்தையும் ஆரம்பிக்காவிடினும் பிராரப்த வசத்தால் (நாம் தேடாத இன்பதுன்பம் வருவதுபோல்) சரீர யாத்திரை தானே நிகழும்.

இரட்டைகள் :—இன்பதுன்பம், வெற்றிதோல்வி, லாப நஷ்டம், புண்ணியபாவம் முதலியன.

(यो) वेदानपि संन्यस्यति, केवलमविच्छिन्नानुरागं लभते ॥ ४९ ॥

(யோ) வேதானபி ஸந்ந்யஸ்யதி, கேவலமவிச்
சின்னானுராகம் லபதே ॥ 49 ॥

(வேதான் அபி) வேதங்களையுங்கூட (ய:) எவன் (ஸந்ந்யஸ்யதி) விடுகின்றானோ (கேவலம் - அவிச்சின்ன -

அனுராகம்) இடையறாத பக்தி யொன்றைமட்டும் (லபதே) அடைகிறானோ - அவன் மாயையைத் தாண்டு கிறான்.

ஒப்பிடுக.—' ந யோஜயேத் கர்மஸு'' கர்ம - மூடான் இயற்கையாகவே காமிய கருமத்தினால் மதிகெட்டவர் களை மீண்டும் அக்கருமங்களிலேயே - அவை வேதத்தில் கூறப்பட்டிருந்தாலும் - புகுத்தக் கூடாது.

'பரோக்ஷ வாதோ வேதோயம் பாலானு - மனுசா ஸனம் । கர்மமோக்ஷாய கர்மாணி விதத்தே ஹ்யகதம் யதா !' வேதம் பொருளை மறைத்துக் கூறுவது அறியாத பிள்ளைகளுக்குக் கட்டளையிடுவது போலாம். (வியாதி நீங்கி மருந்துண்ணுமலிருப்பதற்காகவே மருந்து கொடுக் கப்படுவதுபோல் கர்மம் விலகுவதற்காகவே கர்மம் போதிக்கப்படுகிறது. —பாகவதம் 11.3.44.

स तरति स तरति स लोकांस्तारयति ॥ ५० ॥

ஸ தரதி ஸ தரதி ஸ லோகாம் - ஸ்தாரயதி | 50 |

(ஸ:) அவன் (தரதி) தாண்டுகிறான்;

(ஸ:) அவன் (தரதி) தாண்டுகிறான்; (ஸ:) அவன் (லோகான்) உலகங்களை (தாரயதி) தாண்டுவிக்கிறான்.

தரதி.—இரண்டுமுறை கூறியது உறுதி என்பதைக் குறிக்க. ஓ. 'தைவீ ஹ்யேஷா குணமயீ மம மாயா துரத்யயா । மாமேவ யே ப்ரபத்யந்தே மாயாமேதாம் தரந்தி தே ॥' இந்த முக்குண வடிவமான என் மாயை தெய்வசக்தி வாய்ந்தது: தாண்டுதற்கரியது; எவர்கள் என்னையே சரணடைகின்றார்களோ அவர்கள்தான் இந்த மாயையைத் தாண்டுகிறார்கள். கீதை 7-14.

தாரயந்தி—ஓ 'சாந்தா மஹாந்தோ நிவஸந்தி ஸந்தோ வஸந்தவல்லோகஹிதம் சரந்த:। தீர்ண: ஸ்வயம் பீம - பவார்ணவம் ஜனா - னஹேதுனான்யானபி தாரயந்த:'॥

மனவமைதியுள்ளவர்களும் மகான்களும், வஸந்த காலத்தைப் போல் உலகிற்கு நன்மையைச் செய்பவர்களும் பயங்கரமான பிறவிக்கடலைத் தாங்கள் தாண்டியவர்களும் பிறமனிதர்களையும் காரணத்தை வேண்டாமல் தாண்டுவிப்பவர்களுமான நல்லோர்கள் உலகில் இருக்கிறார்கள். விவேகசூடாமணி; 37

अनिर्वचनीयं प्रेमस्वरूपम् ॥ ५१ ॥

அநிர்வசனீயம் ப்ரேமஸ்வரூபம் ॥ 51 ॥

(ப்ரேம - ஸ்வரூபம்) பிரேமை அல்லது அன்பின் ஸ்வரூபம் (அநிர்வசனீயம்) எடுத்துரைக்க இயலாதது.

ஒப்பிடுக—' ஆரறிவார் என்ன அனந்தமறை ஓலமிடும்
பேரறிவே இன்பப் பெருக்கே பராபரமே.
உரையிறந்த அன்பருளத் தோங்கொளியாயோங்கிக்
கரையிறந்த இன்பக் கடலே பராபரமே.
—தாயுமானவர்.

मूकास्वादनवत् ॥ ५२ ॥

மூகாஸ்வாதனவத் ॥ 52 ॥

(மூக -) ஊமையினுடைய (ஆஸ்வாதனவத்) ருசியனுபவத்தைப்போல்.

ஊமையின் அனுபவம் அவனால் மட்டும் உணரப் படுமேயன்றி, பிறருக்கு அவனால் அதை விளக்க இய லாது. அவ்வாறே பிரேம பக்தியால் உண்டாகும் ஆனந் தம் உள்ளே உணரப்படுமேயன்றி வர்ணிக்க இயலாதது.

ஒ. 'யதோ வாசோ நிவர்த்தந்தே। அப்ராப்ய மனஸா ஸஹ। ஆனந்தம் ப்ரஹ்மணோ வித்வான்। ந பிபேதி கதா சனேதி।' எதினின்று எட்டிப் பிடிக்க முடியா மல் வாய்ச் சொற்கள் திரும்பி விடுகின்றனவோ, மன துடன் கூட, அந்த பிரம்மானந்த நிலையை அறிந்தவன் ஒருபோதும் பயப்பட மாட்டான். —தை. உப. 2.4.

प्रकाशते क्वापि पात्रे ॥ ५३ ॥

ப்ரகாசதே க்வாபி பாத்ரே ॥ 53 ॥

(அபி) எனினும் (க்வ) எங்கு (பாத்ரே) பாத்ரம் அதாவது தகுந்த இடம் வாய்க்கின்றதோ—அங்கு— (ப்ரகாசதே) அது பிரகாசிக்கிறது.

ப்ரகாச்யதே—பா. பே.

गुणरहितं कामनारहितं प्रतिक्षणवर्धमान - मविच्छिन्नं सूक्ष्मतर - मनुभवरूपम् ॥ ५४ ॥

குணரஹிதம் காமனாரஹிதம் ப்ரதிக்ஷணவர்த்த மான - மவிச்சின்னம் ஸூக்ஷ்மதர - மனுபவ-ரூபம் ॥

(குணரஹிதம்) — அந்தப் பிரேமை — முக்குணங் களைக் கடந்தது (காமனா ரஹிதம்) பயனில் ஆசையில்லா தது (ப்ரதிக்ஷண - வர்த்தமானம்) ஒவ்வொரு கணமும் வளர்ந்து கொண்டே இருப்பது (அவிச்சின்னம்) இடை

யருதது (ஸூக்ஷ்மதரம்) மிக நுட்பமானது (அனுபவ ரூபம்) அனுபவ வடிவானது.

ஒப்பிடுக: அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாழ் ஆர்வலர்
புன் கண்நீர் பூசல் தரும் —குறள்.

तत्प्राप्य तदेवावलोकयति तदेव शृणोति तदेव भाषयति तदेव चिन्तयति ॥ ५५ ॥

தத் ப்ராப்ய ததேவாவலோகயதி ததேவ ச்ருணோதி ததேவ பாஷயதி ததேவ சிந்தயதி ॥ 55 ॥

(தத்) அதை (ப்ராப்ய) அடைந்து (தத்ஏவ) அதையே (அவலோகயதி) பார்ப்பான் (தத்ஏவ) அதையே (ச்ருணோதி) கேட்பான் (தத்ஏவ) அதையே (பாஷயதி) பேசுவான் (தத்ஏவ) அதையே (சிந்தயதி) சிந்திப்பான்.

ஒப்பிடுக: 'தன் மனஸ்காஸ்—ததாலாபாஸ்—தத் விசேஷ்டாஸ்-ததாத்மிகா:। தத்குணானேவ காயந்த்யோ நாத்மாகாராணி ஸஸ்மரு:॥' — பகவானிடத்திலேயே மனம் சென்றவர்களாகவும் அவரைப்பற்றியே பேசுகிறவர்களாகவும் அவருடைய லீலைகளை அபிநயம் செய்கின்றவர்களாகவும் அவரிடம் பிராணனை வைத்தவர்களாகவும் அவருடைய குணங்களையே பாடுகின்றவர்களாகவும் அவர்கள் தங்களுடைய வீடுகளை நினைக்கவில்லை —ராஸக்ரீடை-ஸ்ரீமத் பாகவதம். 10-30-44.

गौणी त्रिधा गुणभेदा - दार्तादि - भेदाद्वा ॥ ५६ ॥

கௌணீ த்ரிதா குணபேதா - தார்த்தாதி பேதாத்வா ॥ 56 ॥

(கௌணீ) முக்கியமல்லாத பக்தி (த்ரிதா) மூன்று வகை, (குணபேதாத்) ஸத்வம் ரஜஸ் தமஸ்—என்ற குண பேதத்தாலோ (ஆர்த்தாதி-பேதாத்வா) அல்லது ஆர்த் தன் முதலிய பேதத்தாலோ.

ஒப்பிடுக: முன்கோபமும் பேதபுத்தியும் உள்ள எவன் இம்சையோ இடம்பத்தையோ பொறாமை யையோ முன்னிட்டுக்கொண்டு என்னை வழிபடுகிறானோ அவன் தாமஸன். பேதபுத்தியுள்ள எவன் விஷய சுகங் களையோ புகழையோ ஐசுவரியத்தையோ முன்னிட்டுக் கொண்டு விக்ரஹங்களில் என்னைப் பூஜிப்பானோ அவன் ராஜஸன் பேதபுத்தியுள்ள எவன் பாவத்தைப் போக்கிக் கொள்ளுங் கருத்துடனோ, பகவதர்ப்பணபுத்தியுடனோ, பூஜிப்பது கடமையென்ற நோக்கத்துடனோ பக்தி செய் கின்றானோ அவன் ஸாத்விகன்.

—பாகவதம் 3 29. 8-10

ஆர்த்தன் முதலிய மூவர்.—(i) ஆர்த்தர் அல்லது துன் புற்றவர்க்கு உதாரணம் குந்தி, திரௌபதி, பரீக்ஷித்து. (ii) ஜிஜ்ஞாஸு அல்லது அறிவு வேட்கை உடையவர் வியாஸர், வசிஷ்டர் போன்றவர். (iii) அர்த்தார்த்தி அல்லது பொருளை நாடுபவர் சுக்ரீவன், துருவன் போன்ற வர். பராபக்தியுடைய ஞானி இம்மூவர்க்கும் மேல்.

—கீதை: 7.16.

उत्तरस्मा - दुत्तरस्मात्पूर्वपूर्वा श्रेयाय भवति ॥ ५७ ॥

உத்தரஸ்மா - துத்தரஸ்மாத் பூர்வ-பூர்வா
ச்ரேயாய பவதி ॥ 57 ॥

(உத்தரஸ்மாத் உத்தரஸ்மாத்) பிற்பட்டுப் பிற் பட்டு வருவதைக் காட்டிலும் (பூர்வ-பூர்வா) முற்பட்டு

முற்பட்டுள்ளது. (ச்ரேயாய) உயர் நலத்திற்குக் காரண மாக (பவதி) ஆகிறது.

தாமஸ பக்தியினும் ராஜஸபக்தி மேம்பட்டது; ராஜஸபக்தியினும் ஸாத்விக பக்தி மேம்பட்டது. அவ்வாறே பொருளை நாடுபவனைவிட அறிவை நாடுபவன் மேல்; அவனினும் மேல் துன்பத்தின் மிகுதியால் வேறு புகலிடமின்றி பகவானை நாடுபவன். பக்தி செய்வதால் எல்லோரும் சிறந்தவரே எனக் கூறுகிறது கீதை.

'துன்பக் கண்ணீரைத் துடைக்கும் உன் தரிசனம் துன்பம் வரும்போது கிட்டுவதால் அடிக்கடி துன்பம் வரட்டும் என்பது என் பிரார்த்தனை' என்று குந்திதேவி கிருஷ்ணனிடம் கூறுகிருள். பாகவதம் 1-8-25

ஒப்பிடுக :—'ஸேயம் ஜ்ஞான-நிஷ்டா ஆர்த்தாதி பக்தித்ரயாபேக்ஷயா பரா சதுர்த்தீ பக்திரித்யுக்தா. தயா பரயா பக்த்யா பகவந்தம் தத்வதோபி ஜாநாதி.' ஞான நிஷ்டையானது துன்புற்றோர் முதலிய மூவரின் பக்தியைக் காட்டிலும் சிறந்த நான்காவதாகக் கூறப்பட்டுள்ளது. அந்தப் பராபக்தியால் பகவானை பக்தன் உள்ளபடி உணர்கிருன்'.

சங்கரபாஷ்யம் : கீதை 18.55

अन्यस्मात् सौलभ्यं भक्तौ ॥ ५८ ॥

அன்யஸ்மாத் ஸௌலப்யம் பக்தௌ ॥ 58 ॥

(அன்யஸ்மாத்) மற்ற மார்க்கங்களைக் காட்டிலும் (பக்தௌ) பக்தி மார்க்கத்தில் (ஸௌலப்யம்) — பகவானை அடைதல் எளிது.

ஒப்பிடுக:—'த்யாயன் க்ருதே யஜன் யஜ்ஞைஸ் த்ரேதாயாம் த்வாபரேர்ச்சயன்। யதாப்னோதி ததாப்னோதி கலௌ ஸங்கீர்த்ய கேசவம்॥' கிருதயுகத்தில் தியானத்தாலும் திரேதாயுகத்தில் யாகங்களால் ஆராதித்தும், துவாபரத்தில் அர்ச்சித்தும் எதை ஒருவன் அடைவானோ அதைக் கலியில் கேசவ கீர்த்தனத்தாலேயே அடைவான் விஷ்ணுபுராணம் 6.2.17

பக்தியோகம் வித்தைகளுக்கரசு, இரகசியங்களுள் சிறந்தது, உத்தமமானது, பரிசுத்தமளிப்பது, நேரில் கண்டனுபவிக்கக் கூடியது, தர்மத்தினின்று பிறழாதது, அனுஷ்டித்தற்கு மிக எளியது, என்றும் அழியாதது.

கீதை 9.2

प्रमाणान्तरस्यानपेक्षत्वात् स्वयंप्रमाणत्वात् ॥ ५९ ॥

ப்ரமாணாந்தரஸ்யாநபேக்ஷத்வாத் ஸ்வயம் ப்ரமாணத்வாத் ॥ 59 ॥

(ப்ரமாண — அந்தரஸ்ய) வேறு பிரமாணத்தினுடைய ஆதரவை (அநபேக்ஷத்வாத்) இது வேண்டி நிற்காமையாலும் (ஸ்வயம்) தனக்குத்தானே பிரமாணமாயிருப்பதாலும்.

பிரமாணம்:—'ப்ரத்யக்ஷ—அனுமான-ஆகமா: ப்ரமாணானி' பிரத்யக்ஷம் அனுமானம் ஆகமம் என்பவை பிரமாணங்கள் (பதஞ்ஜலி யோகசூத்ரம்). பிரத்யக்ஷமாவது தனக்குத்தானே கண்டனுபவித்துணர்வது. அனுமானமாவது தகுந்த காரணங்களைக் கொண்டு புத்தியால் ஊகித்தறிவது; புகையிருப்பதால் நெருப்பிருக்கும் என்பதுபோல். ஆகமமாவது அனுபவித்தறிந்த மகா புருஷர்களுடைய வாக்கியம்; இது சப்தம் அல்லது ஆப்த வாக்

கியம் எனப்படுவது. பக்தன் ப்ரத்யக்ஷமாய்த் தனக்குத் தானே பக்தியின் பேரின்பத்தை அனுபவிப்பதால் அதை நிரூபிக்க அவனுக்கு வேறு பிரமாணம் அவசியமில்லை. அதனால்தான் கீதை பக்தியை 'ப்ரத்யக்ஷாவகமம்' என வர்ணித்தது

शान्तिरूपात्परमानन्दरूपाच्च ॥ ६० ॥

சாந்தி ரூபாத் பரமானந்த ரூபாச்ச ॥ 60 ॥

(சாந்தி—ரூபாத்) அமைதி வடிவாயிருத்தலாலும் (பரம-ஆனந்த-ரூபாத் ச) உத்தமமான ஆனந்த வடிவாயும் இருத்தலாலும்.

சாந்தி :—எங்கும் நிரப்பியதும் நிலைகுலையாததும் ஆகிய ஸமுத்திரத்தை நதிகள் எவ்வாறு அடைகின்றனவோ அவ்வாறு ஆசைகளெல்லாம் எவனிடம் அடைந்து ஒடுங்குகின்றனவோ அவன் சாந்தியை எய்துகிறான்; ஆசைகளைப் பின்பற்றிச் செல்பவன் எய்தமாட்டான். 'அசாந்தஸ்ய குத: ஸுகம்' சாந்தியில்லாதவனுக்கு சுகம் ஏது? சாந்தியே பரமானந்தம்.

கீதை 2.70

ஒப்பிடுக :—' நித்யோநித்யானாம் சேதனச் சேதனானாம் ஏகோ பஹூனாம் யோ விததாதி காமான்' தமாத்மஸ்த்தம் யேऽனுபச்யந்தி தீராஸ் தேஷாம் சாந்தி: சாச்வதீ நேதரேஷாம்'.

கட. உப 5.13

लोकहानौ चिन्ता न कार्या निवेदितात्मलोक - वेदत्वात् ॥ ६१ ॥

லோகஹானௌ சிந்தா ந கார்யா
நிவேதிதாத்மலோக - வேதத்வாத் ॥ 61

(லோக ஹாநௌ) உலக சம்பந்தமான கஷ்ட நஷ்டம் ஏற்படும்பொழுது (சிந்தா ந கார்யா) கவலைப்படக் கூடாது; (நிவேதித — ஆத்ம — லோக வேதத்வாத்) தன்னையும் உலகையும் வேதத்தையும் பகவானுக்கு அர்ப்பணம் செய்து விட்டமையால்.

நிவேதித—ஆத்ம—லோக — வேத — சீலத்வாத்— பாட பேதம்.

ஒப்பிடுக:—எவன் மகிழ்வதில்லையோ, வெறுப்பதில்லையோ, துயரப்படுவதில்லையோ, எவன் நல்லவையுந் தீயவையுமான கருமங்களனைத்தையும் விட்டவனே அந்த பக்திமான் எனக்குப் பிரியமானவன். பகைவனிடத்தும், நண்பனிடத்தும் அவ்வாறே மானத்திலும், அவமானத்திலும் ஸமமானவனும் குளிரிலும் வெப்பத்திலும் சுகத்திலும துக்கத்திலும் ஸமமானவனும் பற்றற்றவனும் எவனோ அவன் எனக்குப் பிரியமானவன்.

கீதை 12. 17-18

அன்றே யென்றனுவியு முடலு முடைமை யெல்லா முங்
குன்றேயனையா யென்னை யாட்கொண்டபோதே கொண்டிலையோ
இன்றோரிடையூறெனக் குளதோ எண்டோண் முக்கணெம்மானே
நன்றே செய்வாய் பிழை செய்வாய் நானோ அதற்கு நாயகமே.—திருவாசகம்.

न तदसिद्धौ लोकव्यवहारो हेयः किन्तु फलत्यागस्तत्साधनं च कार्यमेव ॥ ६२ ॥

ந ததஸித்தௌ லோகவ்யவஹாரோ ஹேய: கிந்து பலத்யாகஸ் - தத்ஸாதனஞ்ச கார்யமேவ ॥ 62 ॥

(தத் - அஸித்தெள) அந்த பக்தி சித்தியாகாதவரை (லோகவ்யவஹார:) உலக வியவகாரம் (ந ஹேய:) தள்ளத் தக்கதன்று; (கிம் து) என்ன செய்யவேண்டும் எனின் (பலத்யாக;) கருமத்தின் பயனைத் தியாகம் செய்ய வேண்டும்; (தத்ஸாதனஞ்ச) பக்திக்கு உதவியாயுள்ள கருமம் (கார்யம் ஏவ) செய்யத்தகுந்ததே.

தத்—ஸித்தெள—பாட பேதம்.

ஒப்பிடுக:—ஆகையால் பற்றற்றவனாக எப்போதும் செய்யவேண்டிய கர்மத்தைச் செவ்வனே செய். ஏனெனில் பற்றில்லாமல் கர்மத்தை யனுஷ்டித்துப் புருஷன் உயர் நலத்தை எய்துகிறான். ஜனகன் முதலானோர்கள் கர்மத்தாலேயே உயர்ந்த சித்தியை அடைந்தனர். மேலும்—லோகஸங்க்ரஹத்தை—உலகை நல்வழிப்படுத்தலைக் கருதியும் கருமம் செய்வதற்குரியவனாகிறாய். —கீதை 3.19-20

स्त्री - धन - नास्तिक - चरित्रं न श्रवणीयम् ॥ ६३ ॥

ஸ்த்ரீ - தன - நாஸ்திக சரித்ரம் ந ச்ரவணீயம் ॥ 63 ॥

(ஸ்த்ரீ) ஸ்திரீகள் (தன—) பொருள் (நாஸ்திக—) கடவுள் நம்பிக்கையில்லாதவர்கள் — இவ்விஷயமான— (சரித்ரம்) சரித்திரம் (ந ச்ரவணீயம்) கேட்கத் தக்கதன்று.

ஸ்த்ரீ—தன—நாஸ்திக—வைரி — சரித்ரம் — பாட பேதம்.

காம உணர்ச்சியைத் தூண்டும் கதைகள், நாடகங்கள், படங்கள் முதலியவற்றையும், பொருளீட்டுவதில் பேராவல் கொண்டவர்களின் சரித்திரங்களையும், நாஸ்திகர்களின் நடவடிக்கைகளையும் பக்தன் கண்ணால் பார்க்

கவும் காதால் கேட்கவும் கூடாது. அவற்றில் ஆசையுள்ளவர்களின் கூட்டுறவையும் முற்றுந் துறக்க வேண்டும். இதை ஸ்ரீ ராமகிருஷ்ணர் 'காம - காஞ்சன - தியாகம்' எனும் சொற்றொடரால் குறிப்பிடுவது வழக்கம்.

अभिमान - दम्भादिकं त्याज्यम् ॥ ६४ ॥

அபிமான - தம்பாதிகம் த்யாஜ்யம் ॥ 64 ॥

(அபிமான-) கர்வம் (தம்ப- இடம்பம் (ஆதிகம்) முதலியவை (த்யாஜ்யம்) தள்ளப் படவேண்டும்.

ஒப்பிடுக:—நான் பற்றொழிந்தவன் என்ற அகங்காரத்தையும் யோக சித்தியால் ஏற்படும் வன்மையையும் அது சம்பந்தமான கர்வத்தையும், பிராரப்தவசமாய் வருபவைவற்றிலும் ஆசை கோபம் உடைமை முதலிய பாவனைகளையும ஒழித்து எனது என்ற எண்ணமில்லாத வனுப் மன அமைதியுற்றவன் பிரம்மம் ஆவதற்கு உரியவனாகிறான் பிரம்மத்தில் நிஷ்டை கூடியவனும் தெளிந்த மனமுடையவனுமான அவன் துக்கிப்பதில்லை, ஆசைப்படுவதில்லை; எல்லா உயிர்களிடத்தும் சமமானவனாய் என்னிடத்து ஒப்புயர்வற்ற பக்தியை அடைகிறான்

—கீதை 18.53-54

तदर्पिताखिलाचारः सन् कामक्रोधाभिमानादिकं तस्मिन्नेव करणीयम् ॥

ததர்ப்பிதாகிலாசாரஃ ஸன் காமக்ரோதாபிமானாதிகம் தஸ்மின்னேவ கரணீயம் ॥ 65 ॥

(தத் — அர்ப்பித — அகில — ஆசார: ஸன்) அவனுக்கே எல்லாச் செயல்களையும் அர்ப்பணம் செய்த

வனாய் (காம—க்ரோத—அபிமான—ஆதிகம்) காமம், கோபம், கர்வம் முதலியவற்றையும் கூட (தஸ்மின் ஏவ) அவனிடமே (கரணீயம்) செய்ய வேண்டும்.

காமம் :—' காமம் கண்ணனுக்கு ஆம் '. காமம் எப்படி முழுமனதுடனும் ஆர்வத்துடனும் செய்யப்படுகிறதோ அப்படி பகவானை நேசிக்க வேண்டும். 'கண்ணன் என் காதலி' என்று பாரதி பாடுகிறார்.

க்ரோத :—' பகவானே ! எனக்கு உன் முகத்தைக் காட்டாமல் சோதிக்கிறாயே' என்று அவனிடம் கோபித்துக் கொள்ளலாம்.

அபிமானம் :—யசோதை சீராட்டியதுபோல் ' என் அருமைக் கண்ணன் ' என்று அவனிடம் அபிமானத்தை வைக்கலாம். இவ்வாறாக காமம், குரோதம், அபிமானம் முதலியவற்றை விடமுடியாவிட்டால் மேற்கூறியவாறு பக்திக்கு ஸாதனமாக்கிக் கொண்டால் அவற்றில் இயல்பாயுள்ள தீமை சக்தியற்றுப்போகும், விஷமும் மருந்தாவது போல்.

त्रिरूप - भङ्गपूर्वकं नित्यदास - नित्यकान्ता - भजनात्मकं वा प्रेमैव कार्यम् प्रेमैव कार्यम् ॥ ६६ ॥

த்ரிருப - பங்க - பூர்வகம் நித்ய - தாஸ - நித்ய காந்தா - பஜனாத்மகம் வா ப்ரேமைவ கார்யம் ப்ரேமைவ கார்யம் ‖ 66 ‖

(த்ரிருப—)—முக்குணம், மூன்றுவித கௌணீபக்தி ஆகியவற்றை (பங்க பூர்வகம்) கடப்பதின் மூலமாக (நித்ய-தாஸ-) என்றும் அவனுடைய அடிமைபோலவோ

(நித்ய—காந்தா-பஜனாத்மகம் வா) என்றும் பிரியமான நாயகி போலவோ பணிவிடை செய்வதாக (ப்ரேம ஏவ) பிரேமை ஒன்றே (கார்யம்) செய்யத்தகுந்தது (ப்ரேம ஏவ) பிரேமை ஒன்றே (கார்யம்) செய்யத்தகுந்தது.

நித்ய—தாஸ்ய—பா. பே.

பக்தியால் செய்யும் பணிவிடை பயனைக் கருதியதன்று; அது பிரேமையால் முழுமனதுடன் செய்வது.

ஒப்பிடுக :—'ஸ வை ஸ்வாமீ ஸ வை ப்ருத்யோ குணலுப்தௌ ந காமுகௌ।' (பாகவதம்). ஸ்வாமியும் கைங்கரியம் செய்யும் பக்தனும் இருவருமே ஒருவருடைய குணங்களில் மற்றொருவர் ஈடுபட்டவராவர். அவர்களிடம் வேறு ஆசையில்லை. 'நித்யதாஸ—நித்ய காந்தா' என்பதன் கருத்து இதுவே.

भक्ता एकान्तिनो मुख्याः ॥ ६७ ॥

பக்தா ஏகாந்திநோ முக்க்யாஃ ॥ 67 ॥

(ஏகாந்தினஃ) ஒரே நாட்டமுடையவர்களான (பக்தாஃ) பக்தர்கள் (முக்க்யா :) முதன்மையானவர்கள்.

முக்க்யா :—இதுவரை கூறிய சாதனங்களால் அடையப்படும் உத்தம பக்தி முக்கிய பக்தி எனப்படுவது. 56வது சூத்திரத்தில் குறிப்பிட்ட கௌண பக்தியுடன் ஒப்பிட்டு இது முக்கிய பக்தி எனப்பட்டது. பக்தியைத் தவிர இவ்வுத்தம பக்தர்களுக்கு வேறொன்றிலும் நாட்டமில்லை.

ஒப்பிடுக :—ந பாரமேஷ்ட்யம் ந மஹேந்த்ர திஷ்ண்யம் ந ஸார்வபௌமம் ந ரஸாதி பத்யம்। ந யோக-

ஸித்தி ரபுனர்ப்பவம் வா மய்யர்ப்பிதாத்மேச்சதி மத் விநா அன்யத் ॥ —என்னிடம் மனதை அர்ப்பணம் செய்தவன் பிரம்மாவின் பதவியையோ, இந்திரப் பதவியையோ, பூலோகத்தையாளும் பதவியையோ, பாதாளத்தின் ஆட்சியையோ விரும்பமாட்டான். மோக்ஷத்தையும் விரும்பமாட்டான். என்னைத்தவிர மற்ற எதையும் விரும்பமாட்டான்.

—பாகவதம் 11. 14.14.

कण्ठावरोध - रोमांचाश्रुभिः परस्परं लपमानाः पावयन्ति कुलानि पृथिवींच ॥ ६८ ॥

கண்ட்டா வரோத—ரோமாஞ்சாச்ருபி: பரஸ்பரம் லபமாநா: பாவயந்தி குலாணி ப்ருதிவீஞ்ச । 68 ॥

(கண்ட்ட — அவரோத — ரோமாஞ்ச — அச்ருபி:) குரல் தழுதழுக்க மயிர்சிலிர்ப்பக் கண்களில் நீர்பெருக (பரஸ்பரம்) ஒருவருக்கொருவர் (லபமாநா:) பேசிக் கொள்பவர்களாய் (குலாணி) பிறந்த குலங்களையும் (ப்ருதிவீஞ்ச) பூமியையும் (பாவயந்தி) அவர்கள் புனிதமாக்குகிறார்கள்.

ஒப்பிடுக :—குலம் பவித்ரம் ஜனனீ க்ருதார்த்தா விச்வம்பரா புண்யவதீ ச தேந ! அபாரஸச்சித் ஸுகஸாகரே ஸதா விலீயதே யஸ்ய மன: ப்ரசார: ॥ எவனுடைய மனது அளவு கடந்த ஸச்சிதானந்தக் கடலில் எப்பொழுதும் மூழ்கிக் கரைந்து விட்டதோ அவனு

டைய குலம் பரிசுத்தமாகிறது, தாய் பிறவிப் பயனை எய்துகிருள், பூதேவி புண்ணியவதியாகிருள்.

—ஸூதஸம்ஹிதை 2.20.45.

பெற்றவட்கே தெரியுமந்த வருத்தம் பிள்ளை
பெருப்பேதையறிவாளோ பேரானந்தம்
உற்றவர்க்கே கண்ணீர் கம்பலை யுண்டாகும்
உருதவரே கல் நெஞ்சமுடையராவார்.

—தாயுமானவர்,

காதலாகிக்கசிந்து கண்ணீர்மல்கி
ஓதுவார்தமை நன்னெறிக்குய்ப்பது
வேத நான்கினு மெய்ப்பொருளாவது
நாதன் நாம நமச்சிவாயவே. —சம்பந்தர்.

तीर्थी कुर्वन्ति तीर्थानि सुकर्मी कुर्वन्ति कर्माणि सच्छास्त्री कुर्वन्ति शास्त्राणि ॥ ६९ ॥

தீர்த்தீ குர்வந்தி தீர்த்தானி ஸுகர்மீ குர்வந்தி கர்மாணி ஸச்சாஸ்த்ரீ குர்வந்தி சாஸ்த்ராணி ॥ 69 ॥

(தீர்த்தானி) புண்ணியஸ்தலங்களை (தீர்த்தீ குர்வந்தி) புண்ணியமுடையதாக்குகின்றனர்; (கர்மாணி) கருமங்களை (ஸுகர்மீ குர்வந்தி) ஸத் கருமங்களாக்குகின்றனர்; (சாஸ்த்ராணி) சாஸ்த்திரங்களை (ஸத் சாஸ்திரீ குர்வந்தி) நல்ல சாஸ்திரங்களாக்குகின்றனர்.

ஏ. 'நஹ்யம்மயானி தீர்த்தானி ந தேவா ம்ருச்சிலாமயாஃ। தே புனந்த்யுருகாலேன தர்சனாதேவ ஸாதவஃ॥' ஜலமயமானவை மட்டும் தீர்த்தங்களல்ல; மண்ணாலுங் கல்லாலுஞ் செய்த விக்கிரகங்கள் மட்டும் தெய்வமல்ல

அவை நாளடைவில் புனிதத்தையளிக்கின்றன. ஸாதுக்களோ தரிசித்த மாத்திரத்திலேயே பயனளிக்கிறார்கள்.
—பாகவதம் 10.48.31.

तन्मयाः ॥ ७० ॥

தன்மயா: ॥ 70 ॥

(தன் மயா :) அவன் மயமாகவே ஆகிவிட்டவர்கள்.

ஏ. 'தன் மனஸ்காஸ்—ததாலாபாஸ்—தத்விசேஷ்டாஸ்—ததாத்மிகா: । தத் குணானேவ காயந்த்யோ நாத்மாகாராணி ஸஸ்மரு: ॥' அவரிடத்திலேயே மனம் சென்றவர்களாகவும், அவரைப்பற்றியே பேசுகிறவர்களாகவும், அவருடைய லீலைகளை அபிநயம் செய்கின்றவர்களாகவும், அவரிடம் பிராணனை வைத்தவர்களாகவும், அவருடைய குணங்களையே பாடுகின்றவர்களாகவும் அவர்கள் தங்களைப்பற்றியோ தங்கள் வீட்டைப் பற்றியோ நினைக்கவில்லை.

—ராஸக்ரீடையில் கோபியர்: பாக. 10.30.44.

मोदन्ते पितरो नृत्यन्ति देवताः सनाथाचेयं भूर्भवति ॥ ७१ ॥

மோதந்தே பிதரோ ந்ருத்யந்தி தேவதா: ஸநாதாசேயம் பூர்ப்பவதி । 71 ।

(பிதர:) பிதிருக்கள் (மோதந்தே) மகிழ்ச்சியடைகிறார்கள்; (தேவதா:) தேவதைகள் (ந்ருத்யந்தி) சந்தோஷத்தால் நடனமாடுகிறார்கள்; (இயம்) இந்த (பூச) பூமியும் (ஸநாதா) நாயகனை அடைந்ததாக (பவதி) ஆகிறது.

ஏ. 'மகன் தந்தைக்காற்றுமுதவி இவன் தந்தை
என் நோற்றான் கொல் என்னுஞ் சொல்'

இவன் தந்தை என்ன தவஞ்செய்து இப்புத்திரனைப் பெற்றானோ என்று உலகம் புகழும்படி ஒருவன் வாழ்வதே அவனுடைய முன்னோர்களுக்கு அவன் செய்யும் சிறந்த உதவி. அவனுடைய நல்வாழ்க்கையால் அவ்வம்சத்து முன்னோர் ஈடேறி நற்கதியடைகின்றனர். வேரில் நீர்விட்டால் அது மரம் முழுவதிற்கும் மகிழ்ச்சியளிப்பதுபோல் இறைவனிடம் பக்தி எல்லா தேவதைகளுக்கும் திருப்தியளிக்கிறது. பூதேவி தன்னைக் காப்பவனையடைந்தாற்போல் இன்புறுகிறாள்.

नास्ति तेषु जाति - विद्या - कुल - रूप - धन - क्रियादि - भेदः ॥ ७२॥

நாஸ்தி தேஷு ஜாதி—வித்யா—குல—ரூப—தன—க்ரியாதி—பேத: ॥ 72 ॥

(தேஷு) அவர்களிடை (ஜாதி) ஜாதி (வித்யா—) கல்வி (குல) குலம் (ரூப) வடிவம் (தன—) பொருள் (க்ரியா—) தொழில் (ஆதி) முதலிய (பேத :) வேற்றுமை (நாஸ்தி) இல்லை.

ஏ. விருஷபர்வா, பலி, பாணன், மயன், விபீஷணன், சுக்ரீவன் ஹனுமான், கரடியாகிய ஜாம்பவான், யானை, கழுகாகிய ஜடாயு, தராசு பிடிப்பவன், வியாதன், கோபிகைகள், யக்ஞ பத்தினிகள் இங்ஙனம் வெகு பேர்கள் அந்தந்த யுகத்தில் ஸாதுக்களின் சேர்க்கையால் என் ஸ்தான மடைந்தார்கள். இவர்களிற் பலர் வேதங்களை அத்தியயனம் செய்தவர்களல்லர், விரதங்களையனுஷ்டித்தவர்களல்லர், தவஞ் செய்தவர்களல்லர்.

ஸாதுக்களின் சேர்க்கை மாத்திரத்தினுல் ஏற்பட்ட பக்தி யால் என்னை அடைந்தார்கள்.

—பாக. 11. 12—5—8.

यतस्तदीयाः ॥ ७३ ॥

யதஸ்ததீயா : ॥ 73 ॥

(யதஃ) ஏனெனில் (ததீயாஃ) அவர்கள் அவனுடைய வர்களாகவே ஆகிவிட்டமையால்

ஒப்பிடுக :—' நிர்தோஷம் ஹி ஸமம் ப்ரஹ்ம தஸ் மாத் ப்ரஹ்மணி தே ஸ்த்திதாஃ ।' பிரம்மம் ஸமமான தும் தோஷமற்றதுமாயிருப்பதால் ஸமத்துவ நிலை எய் திய அவர்கள் அக்காரணத்தால் பிரம்மத்திடம் நிலை பெறுகின்றனர்.

—கீ 5.19

' ஜ்ஞானீ த்வாத்மைவ மே மதம்' ஞானி நானே என்பது என் மதம்.

—பகவான் கூறியது : கீதை 7.18

பகவானைக் காண விரும்புகிருயா? பகவத் பிரேமை யால் பித்தேறிய ஒருவனைத் தேடு. அவனிடத்தில் பகவா னைக் காண்பாய்.

—ஸ்ரீராமகிருஷ்ணர்

वादो नावलम्ब्यः ॥ ७४ ॥

வாதோ நாவலம்ப்ய : ॥ 74 ॥

(வாதஃ) பகவானைப்பற்றி வாக்குவாதம் (ந அவலம் ப்யஃ) கைக்கொள்ளத்தக்கதன்று.

ஒப்பிடுக :—கற்றதுங் கேட்டதுந்தானே ஏதுக்காகக்
கடபடமென் றுருட்டுதற்கோ கல்லால்
எம்மான்

குற்றமறக் கைகாட்டுங் கருத்தைக் கண்டு
குணங்குறி யற்றின்ப நிட்டைகூட

அன்றோ?

—தாயுமானவர்

'வெல்லாம வெவரையும் மருட்டிவிட வகைவந்த வித்தையென முத்தி தருமோ? —தாயுமானவர்

ஆழமில்லாத குளத்தில் நீர் குடிக்க வேண்டுமானால் அதைக்கலக்காமல் மெதுவாகக் குடிக்கவேண்டும். கலக்கி விட்டால் அடியிலுள்ள சேறு மேலே கிளம்பிவிடும். சாஸ்திரங்களைப் பற்றி வீண் வாதத்தில் இறங்கினால் உன் மூளை கலங்கிவிடும். —ஸ்ரீ ராமகிருஷ்ணர்

'தமேவைகம் ஜானத ஆத்மானம் அன்யா வாசோ விமுஞ்சத அம்ருதஸ்யைஷ ஸேதுः'॥ அந்த ஒருவனாகிய பரமாத்மாவையே அறிவீர்களாக. மற்ற வார்த்தைகளை விட்டொழிக. இதுவே மோக்ஷத்திற்குப் பாலம்.

—முண்டகோபநிஷத் 2.2.5

बाहुल्यावकाशा दनियतत्वाच्च ॥ ७५ ॥

பாஹுல்யாவகாசா—தநியதத்வாச்ச ॥ 75 ॥

(பாஹுல்ய - அவகாசாத்) மிகுந்த அபிப்பிராய பேதத்திற்கு இடமிருப்பதாலும் (அநியதத்வாத் ச) நிச்சயமான முடிவின்மையாலும்.

ஒப்பிடுக :— 'தர்க்கோऽப்ரதிஷ்டः ச்ருதயோ விபின்னா நைகோ முனிர்-யஸ்ய வச: ப்ரமாணம்। தர்மஸ்ய தத்வம் நிஹிதம் குஹாயாம் மஹாஜனோ யேந கத: ஸ பந்தா:॥' தர்க்கம் நிலைகொள்ளாதது; சுருதி

கள் வேறுபாடுடையன; பிரமாணமான வார்த்தை உடைய முனி ஒருவரன்று; தர்மத்தின் தத்துவம் புத்தி குகையில் மறைந்துள்ளது. மகா புருஷர்கள் எவ்வழியில் சென்றார்களோ அதுவே வழி.

भक्तिशास्त्राणि मननीयानि तदुद्बोधक-कर्माण्यपि करणीयानि ॥ ७६ ॥

பக்தி - சாஸ்த்ராணி மனனீயானி தது்த்போதக - கர்மாண்யபி கரணீயானி ॥ 76 ॥

(பக்தி - சாஸ்த்ராணி) பக்தி சாஸ்திரங்கள் (மனனீயானி) மனனம் செய்யத்தக்கவை; (தத் - உத்போதக -) அந்த பக்தியை உண்டாக்கும் (கர்மாணி அபி) கருமங்களுங்கூட (கரணீயானி) செய்யத்தகுந்தவையாம்.

பக்தி சாஸ்திரங்கள் :— பகவத் கீதை, பாகவதம் முதலியவை.

மனனம் :—வாதத்தைவிட்டு மௌனமாக சாஸ்திரார்த்தங்களை ஆழ்ந்து சிந்திக்க வேண்டும்.

பக்திக்கனுகுணமான கர்மங்கள் :—பாகவத சாஸ்திரத்தில் சிரத்தை, மற்றவைகளை நிந்திக்காமலிருப்பது, மனதையும் வாக்கையும் செயலையும் ஒடுக்குதல், ஸத்தியம், சமம் தமம், அற்புதமான செயல்களை உடைய ஹரியின் ஜன்மம், கர்மம், குணம், முதலியவற்றை சிரவணம் செய்தல், கீர்த்தனம் செய்தல், தியானம் செய்தல், பகவானுடைய புகழை ஒருவர்க்கொருவர் எடுத்துரைத்துக்கொண்டு அதில் உள்ளூர மகிழ்ச்சியும், திருப்தியும், ஆனந்தமும் அடைதல். —பாகவதம் 11.3-26-30

தத் போதகர்மாணி கரணீயானி :—பா. பே.

सुखदु:खेच्छालाभादि - त्यक्ते काले प्रतीक्ष्यमाणे क्षणार्धमपि व्यर्थं न नेयम् ॥ ७७ ॥

ஸுகது:க்கேச்சாலாபாதி - த்யக்தே காலே ப்ரதீக்ஷ்யமாணே க்ஷணார்த்தமபி வ்யர்த்தம் ந நேயம் ॥ 77 ॥

(ஸுக) - சுகம் (துஃக்க—) துக்கம் (இச்சா -) ஆசை (லாப—) இலாபம் (ஆதி) முதலியவை (த்யக்தே) நீங்கிய (காலே) நல்ல காலத்தை (ப்ரதீக்ஷ்யமாணே) எதிர்பார்த்துக்கொண்டு (க்ஷண - அர்த்தம் அபி) இப்பொழுதுள்ள அரைக்கணம் கூட (வ்யர்த்தம்) வீணாக (ந நேயம்) போக்கத்தக்கதன்று.

உலகக் கவலைகள் நீங்கி இறைவனை நிம்மதியாய் வழிபட நல்லகாலத்தை எதிர்பார்த்துக் கொண்டிருப்பவன் அலை ஓய்ந்த பின் ஸமுத்திரத்தில் ஸ்நானம் செய்ய விரும்புபவனைப் போன்றவனாவான். 'ஸமுத்ரே சாந்த கல்லோலே ஸ்நாதுமிச்சதி துர்மதிঃ'

சுகம், துக்கம், ஆசை, இலாபம் முதலியவை நீங்கிய காலம் உத்தம பக்தனுக்குக் காணப்படுவதால், (அவனுக்கு உலகக் கடமைகள் ஏதும் இன்மையால்) அப்படிக் கிடைத்த அவகாசத்தில் அரைக்கணத்தையும் அவன் வீணாக்காமல் நல்ல வகையில் செலவிடவேண்டும் என்றும் இந்த ஸூத்திரத்திற்குப் பொருள் கூறப்படுகிறது.

ப்ரதீக்ஷமாணே—பா. பே

अहिंसा-सत्य-शौच-दयास्तिक्यादि-चारित्र्याणि परिपालनीयानि ॥ ७८ ॥

அஹிம்ஸா—ஸத்ய—சௌச — தயாஸ்திக்யாதி சாரித்ர்யாணி பரிபாலனீயானி ॥ 78 ॥

(அஹிம்ஸா—) அஹிம்ஸை (ஸத்ய—) ஸத்தியம் (சௌச—) சுத்தம் (தயா-) தயை (ஆஸ்திக்ய—) குரு தெய்வம் சாஸ்திரம் ஆகியவற்றில் ஆழ்ந்த நம்பிக்கை (ஆதி) முதலிய (சாரித்ரியாணி) நன்னடக்கைகள் (பரிபாலனீயானி) பரிவுடன் பின்பற்றிப் பாதுகாக்கத் தக்கவையாம்.

ஒப்பிடுக :— 'அஹிம்ஸா — ஸத்ய — அஸ்தேய — ப்ரஹ்மசர்ய—அபரிக்ரஹா யமா : । ஏதே ஜாதி—தேச—கால — ஸமய — அநவச்சின்னா ஸார்வபௌமா மஹா வ்ரதம் ॥' அஹிம்ஸை, ஸத்யம், களவின்மை, பிரம்மசரியம், தானம் வாங்காமை ஆகியவை இயமம் எனப்படும். இவை ஜாதி தேசம் காலம் ஸமயம் முதலிய வரம்புகட்குட்படாமல் எங்கும் கைக்கொள்ள வேண்டிய மகாவிரதம்.

யோகியானவன் ஏற்கெனவே பயின்ற இவ்விரதங்களைச் சித்தி எய்திய பின்னும் கைவிடாமல் உலக நன்மைக்காகப் பரிவுடன் பாதுகாக்க வேண்டும்.

सर्वदा सर्वभावेन निश्चिन्तै-र्भगवानेव भजनीयः ॥ ७९ ॥

ஸர்வதா ஸர்வபாவேன நிச்சிந்தைர் — பகவானேவ பஜனீயః ॥ 79 ॥

(ஸர்வதா) எப்பொழுதும் (ஸர்வபாவேன) எல்லா நிலைகளிலும் (நிச்சிந்தைః) கவலையில்லாமல் (பகவான் ஏவ) பகவானே (பஜனீயః) தியானித்துப் பூஜிக்கத் தகுந்தவர்.

ஒப்பிடுக :—நின்றும் இருந்தும் கிடந்தும் நடந்தும் நினைப்பதுன்னை என்றும் வணங்குவதுன் மலர்த்தாள்.

—அபிராமி அந்தாதி

ஆத்ம ஸமர்ப்பண பாவனையால் வெறும் பேச்சும் ஜபமாகவும், கைத்தொழிலனைத்தும் முத்திரைகளின் விளக்கமாகவும், நடை பிரதக்ஷிணமாகவும், உண்டி முதலியன ஹோமமாகவும், தரையில் கிடத்தல் நமஸ்காரமாகவும் இன்னும் இயற்கையாக முயற்சியின்றி எனது செயல் எது எது உண்டோ அதுவெல்லாம் உன்னுடைய பூஜை முறையாகவும் ஆகட்டும்.

—ஸௌந்தர்யலஹரீ 27.

स कीर्त्यमानः शीघ्रमेवाविर्भवति अनुभावयति च भक्तान् ॥ ८० ॥

ஸ கீர்த்யமான: சீக்க்ரமேவாவிர்ப்பவதி அனுபாவயதி ச பக்தான் ॥ 80 ॥

(ஸ:) அவர் (கீர்த்யமான:) துதிக்கப்பட்டால் (சீக்க்ரம் ஏவ) விரைவிலேயே (ஆவிர்ப்பவதி) காட்சியளிப்பார், (பக்தான்) பக்தர்களை (அனுபாவயதி ச) தன்னை அனுபவிக்கும்படியும் செய்வார்.

அனுபாவயதி :— ஒப்பிடுக :—வியாஸரிடம் நாரதர் கூறுவது—' பக்தியால் பரவசமான சித்தத்துடன் தமது சரண கமலங்களை தியானிப்பவனும், பேராவலினால் நீர் பெருகும் கண்களையுடையவனுமாகிய எனது இருதயத்தில் ஹரியானவர் மெள்ள மெள்ளத் தோன்றினார். மிகுந்த பிரேமையின் கிளர்ச்சியால் புளகாங்கிதமடைந்து, இன்பத்தில் திளைத்து, ஆனந்தப் பெருக்கில் மூழ்கின நான் என்னையோ பிறிதையோ இரண்டையுங் காணவில்லை.'

—பாக 1.6.17—18

त्रिसत्यस्य भक्तिरेव गरीयसी भक्तिरेव गरीयसी ॥ ८१ ॥

த்ரிஸத்யஸ்ய பக்திரேவ கரீயஸீ பக்திரேவ கரீயஸீ ॥ 81 ॥

(த்ரிஸத்யஸ்ய) முக்காலத்தும் ஸத்தியப் பொரு ளான பகவானிடம் (பக்தி: ஏவ) பக்தியே (கரீயஸீ) அனைத்திலும் சிறந்ததாம், (பக்தி: ஏவ) பக்தியே (கரீ யஸீ) அனைத்திலும் சிறந்ததாம்,

ஒப்பிடுக:—'பக்த்யா விநா ப்ரஹ்மஜ்ஞானம் கதாபி ந ஜாயதே। ஸர்வோபாயான் பரித்யஜ்ய பக்திமாச்ரய। பக்தி-நிஷ்டோ பவ, பக்தி-நிஷ்டோ பவ। பக்த்யா ஸர்வே ஸித்தயঃ ஸித்த்யந்தி। பக்த்யா அஸாத்த்யம் ந கிஞ்சிதஸ்தி॥' பக்தியில்லாமல் பிரம்மஞானம் ஒரு போதும் உண்டாகாது. மற்றெல்லா உபாயங்களையும் விட்டு பக்தியைக் கைக்கொள். பக்தியில் நிலைபெறு, பக்தியில் நிலைபெறு. பக்தியால் எல்லா சித்திகளும் சித்திக்கும், பக்தியால் ஆகக்கூடாதது ஒரு சிறிதுமில்லை.

—த்ரிபாத் விபூதி-நாராயணோபநிஷத்.

गुणमाहात्म्यासक्ति - रूपासक्ति - पूजासक्ति - स्मरणासक्ति दास्यासक्ति - सख्यासक्ति - कान्तासक्ति - वात्सल्यासक्ति - आत्मनिवेदनासक्ति - तन्मयासक्ति - परमविरहासक्ति - रूपा एकधाप्येकदशधा भवति ॥ ८२ ॥

குணமாஹாத்ம்யாஸக்தி —ரூபாஸக்தி — பூஜா ஸக்தி—ஸ்மரணாஸக்தி — தாஸ்யாஸக்தி— ஸக்க்யா- ஸக்தி - காந்தாஸக்தி - வாத்ஸல்யாஸக்தி ஆத்ம நிவேதனாஸக்தி — தன்மயாஸக்தி — பரம விரஹா- ஸக்தி—ரூபா ஏகதாப்யேகதசதா பவதி । 82 ।

(குணமாஹாத்ம்ய—ஆஸக்தி) பகவானுடைய குண மகிமைகளில் பற்று (ரூப-ஆஸக்தி) அழகில் பற்று (பூஜா —ஆஸக்தி) பூஜையில் பற்று (ஸ்மரண—ஆஸக்தி) தியா

னத்தில் பற்று (தாஸ்ய—ஆஸக்தி) சேவையில் பற்று (ஸக்க்யாஸக்தி) நட்பில் பற்று (காந்தாஸக்தி) பதிஸதி யின் பற்று (வாத்ஸல்யாஸக்தி) குழந்தையிடம் தாய்க் குள்ளது போன்ற பற்று (ஆத்ம நிவேதன—ஆஸக்தி) தன்னையே அர்ப்பணம் செய்வதில் பற்று (தன்மய—ஆஸக்தி) அவனுகவே ஆய்விடுவதில் பற்று (பரம—விரஹ—ஆஸக்தி) பிரிவாற்றுமை எனும் பற்று என (ரூபா) வடிவுகொண்ட—பக்தி — (ஏகதா அபி) ஒன்றே யாயினும் (ஏகதசதா) பதினெரு வடிவாக (பவதி) ஆகிறது.

ஒப்பிடுக :— பகவத்குணங்களைப் பாடி மகிழ்ந்து பக்தி யைப் பரப்பியவர்களுக்கு உதாரணம் நாரதர், வியாஸர் போன்றவர்கள் ; பகவானுடைய அழகினுல் கவரப்பட்ட பக்தர்களுக்கு உதாரணம் கோபிகள் ; பூஜையில் பற்றுக் கொண்டவர்களுக்கு உதாரணம் அம்பரீஷ சக்ரவர்த்தி ; இடைவிடா தியானத்திற்குப் பிரஹ்லாதன் ; சேவைக்கு ஹனுமார் ; நட்பிற்கு அர்ஜுனனும் உத்தவரும் ; பதி ஸதியின் பற்றிற்கு ருக்மிணி ஸத்யபாமை ஆகியோர் ; வாத்ஸல்யத்திற்குக் கோசலையும் தேவகியும் ; ஆத்ம நிவேதனத்திற்கு பலியும் விபீஷணனும் ; தன்மய பக் திக்கு ஸநகாதியர், சுகர் போன்றவர்கள் ; பிரிவாற்ரு மைக்கு ராதையும், நம்மாழ்வார், சைதன்யர் போன்ற வர்களும். பக்தியின் எல்லா நிலைகளும் ஒருவரிடமே காணப்பெற்றதற்கு நமது காலத்தில் உதாரணமாய் விளங்கியவர் ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர். இந்தப் பதினெரு வகையில் மட்டும் பக்தி அடங்கிவிடாது. மனிதனுடைய இயல்பில் எத்தனை வேற்றுமையுண்டோ அத்தனை வகையுண்டு பக்திப் பண்பிலும்.

इत्येवं वदन्ति जनजल्पनिर्भया एकमताः कुमार - व्यास - शुक - शाण्डिल्य - गर्ग - विष्णु - कौण्डिन्य - शेष - उद्धव - आरुणि - बलि - हनुमद् - विभीषणादयो भक्त्याचार्याः ॥ ८३ ॥

இத்யேவம் வதந்தி ஜனஜல்ப - நிர்ப்பயா ஏக மதா: குமார—வ்யாஸ — சுக — சாண்டில்ய—கர்க்க—விஷ்ணு—கௌண்டின்ய—சேஷ—உத்தவ—ஆருணி - பலி—ஹனுமத்—விபீஷணாதயோ பக்த்யாசார்யா : || 83 |

(இதி ஏவம்) இவ்வாறு (வதந்தி) கூறுகின்றனர் (ஜன—ஜல்ப நிர்ப்பயாஃ) ஜனங்களின் பிதற்றலுக்கு அஞ்சாதவர்களும் (ஏகமதா :) ஒன்றேயான கொள்கை யுடையவர்களுமான (குமார—) ஸநத்குமாரர் (வ்யாஸ—) வேதவியாஸர் (சுக—) சுகர் (சாண்டில்ய—) சாண்டில்ய ரிஷி (கர்க்க—) கர்க்கரிஷி (விஷ்ணு—) விஷ்ணுரிஷி (கௌண்டின்ய—) கௌண்டின்யரிஷி (சேஷ—) ஆதி சேஷர் (உத்தவ—) உத்தவர் (ஆருணி—) ஆருணி (பலி—) பலி சக்ரவர்த்தி (ஹனுமத்—) ஹனுமார் (விபீஷண—) விபீஷணர் (ஆதயஃ) முதலிய (பக்தி—ஆசார்யாஃ) பக்தி சாஸ்திரத்தின் குருமார்கள்.

ஒன்றேயாகிய கொள்கை :—இவர்களுள் கொள்கை பேதம் ஏதுமில்லை.

ஸநத்குமாரர் :—ஸநகர், ஸநந்தனர், ஸநத்ஸுஜாதர், ஸநத்குமாரர் என்ற நால்வரும் பிரம்மாவின் மானஸ புத்திரர்கள் ; என்றும் ஐந்து வயதுக் குழந்தைகளைப் போலிருப்பவர்கள் ; உலகிற்கு ஞானத்தையும் பக்தியை யும் புகட்டும் ஆதி குருமார்கள்.

வேதவியாஸர் :—வசிஷ்டருடைய பேரர், பராசரருடைய புத்திரர், சுகருடைய தந்தை; வேதத்தை நான்காக வகுத்தவர். பதினெட்டுப் புராணங்களையும், மகாபாரதத்தையும் எழுதியவர். விஷ்ணுவின் அம்சாவதாரம்.

சுகர் :—பிறவியிலிருந்தே ஞானி. பாகவதத்தைப் பரீக்ஷித்திற்கு உபதேசித்தவர்.

சாண்டில்யர் :—சாண்டில்ய மஹரிஷியும் நூறு ஸூத்திரங்கள் கொண்ட ஒரு பக்தி சாஸ்திரத்தைச் செய்திருக்கிறார். அவர் கோத்ர ப்ரவர்த்தகருமாவார். சாந்தோக்ய உபநிஷத்தில் சாண்டில்ய வித்தை என்றும் உபாஸனை கூறப்படுகிறது.

கர்க்கரிஷி :—யது குலத்தோரின் புரோகிதர். ஸ்ரீ கிருஷ்ணனுக்கும் பலராமனுக்கும் நாமகரணம் செய்வித்தவர்.

விஷ்ணு—விஷ்ணுஸ்மிருதி என்னும் தர்ம சாஸ்திரம் செய்தவர்.

கௌண்டின்யர் — வாஸிஷ்ட, மைத்ராவருண, கௌண்டின்ய என்ற பிரவரத்துடன் கூடிய கோத்ர ப்ரவர்த்தகர்.

ஆதிசேஷர் :—இருப்பிடமாகவும், படுக்கையாகவும், ஆஸனமாகவும், பாதுகையாகவும், வஸ்திரமாகவும், தலையணையாகவும், குடையாகவும் தம்முடைய சரீர பேதத்தால் பகவானுக்குப் பணிசெய்யும் பெருமையால் 'ஆதி'சேஷர்' என்று ஜனங்களால் சொல்லப்படுகிறவர்.

—ஆளவந்தார்: ஸ்தோத்ரரத்னம் 40.

உத்தவர் :—விருஷ்ணி குலத்தோரின் தலை சிறந்த மந்திரியும், கிருஷ்ணனுக்கு பிரியமான தோழரும்,

பிருஹஸ்பதியின் சிஷ்யரும், புத்தியிற் சிறந்தவருமாகியவர் இவர். பாகவத ஸாரமான உத்தவ கீதை பகவானால் இவருக்கு உபதேசிக்கப்பட்டது.

ஆருணி :—அருணர் எனும் ரிஷியின் குமாரர் ஆருணி: அவருடைய பெயர் உத்தாலகர். அவருடைய குமாரர் ச்வேதகேது. அவரைப்பற்றி பிருஹதாரண்யக உபநிஷத்திலும் சாந்தோக்கிய உபநிஷத்திலும் கூறப்படுகிறது.

பலி சக்ரவர்த்தி :—பிரஹ்லாதருடைய பேரன். வாமனராய் வந்த பகவானுக்கு ஆத்மஸமர்ப்பணம் செய்த பெருமையுடையவர்.

ஹனுமார் ;—ஒ, 'யத்ர யத்ர ரகுநாத - கீர்த்தனம், தத்ர தத்ர க்ருதமஸ்தகாஞ்ஜலிம், பாஷ்பவாரி - பரிபூர்ண - லோசனம் மாருதிம் நமத ராக்ஷஸாந்தகம் ||'

விபீஷணர் :—ஹனுமார், விபீஷணர் முதலியோர் ராம பக்தியில் சிறந்தவர்கள். சரணாகதி தத்துவத்தை விளக்குவதற்கு 'விபீஷண சரணாகதி' பிரசித்தம். பலி, வியாஸர், ஹனுமார், விபீஷணர் ஆகியோர் பக்தி தத்துவத்தை உலகில் நிலைநாட்டி என்றும் சிரஞ்ஜீவிகளாயிருப்பவர்கள்.

य इदं नारदप्रोक्तं शिवानुशासनं विश्वसिति श्रद्धत्ते स प्रेष्ठं लभते स प्रेष्ठं लभत इति ॥ ८४ ॥

इति नारदभक्तिसूत्रं संपूर्णम् ॥

ய இதம் நாரதப்ரோக்தம் சிவானுசாஸனம் விச்வஸிதி ச்ரத்தத்தே ஸ ப்ரேஷ்ட்டம் லபதே ஸ ப்ரேஷ்ட்டம் லபத இதி ॥ 84 ॥

இதி நாரதபக்தி ஸூத்ரம் ஸம்பூர்ணம்.

5

(ய:) எவன் (நாரதப்ரோக்தம்) நாரதரால் கூறப் பெற்ற (இதம்) இந்த (சிவ-அனுசாஸனம்) மங்களமான உபதேசத்தில் (விச்வஸிதி) நம்பிக்கை வைக்கிறுனே (ச்ரத் தத்தே) சிரத்தையுடன் அனுஷ்டிக்கிறுனே (ஸ:) அவன் (ப்ரேஷ்ட்டம்) அன்பிற் சிறந்தவரான பகவானை (லபதே) அடைகிறுன்; (ஸ:) அவன் (ப்ரேஷ்ட்டம்) அன்பிற் சிறந்த பகவானை (லபதே) அடைகிறுன்.

இங்ஙனம் நாரத பக்தி ஸூத்ரம் ஸம்பூர்ணம்.

ஸ பக்திமான் பவதி ஸப்ரேஷ்டம் லபதே—பா. பே.

(யஃ எவன்)—இச்சொல்லால் இந்த சாஸ்திரத்திற்கு எவனும் அதிகாரியே என்பது குறிப்பிடப்படுகிறது. குலத்தாலும் வயதாலும் பாலாலும் படிப்பாலும் பொருளாலும் இதில் வேற்றுமை இல்லை.

சிவ - அனுசாஸனம்—முன் சென்ற பெரியோர்கள் கூறியதை (அனு) பின்பற்றிச் செய்த (சிவ) பரம மங்கள மான (சாஸனம்) உபதேசம். இச்சொற்றொடரால் இந்த சாஸ்திரத்தின் விஷயம் குறிப்பிடப்படுகிறது.

விச்வஸிதி ச்ரத்தத்தே — ப்ரீதியுடன் நம்பிக்கை வைத்து சிரத்தையுடன் அனுஷ்டிப்பது இச்சாஸ்திரத் துடன் தொடர்பு அல்லது ஸம்பந்தத்தைக் குறிப்பிடு கிறது.

ப்ரேஷ்ட்டம் லபதே—அப்படிப்பட்ட அதிகாரி உயர்வற உயர்நலமாயுள்ள பகவானை அடைகிறுன் என்று பிரயோ ஜனம் கூறப்பட்டது.

அனுபந்தம்

ஸூத்ரங்களின் அகராதி

ஆசிரியர் ‘அண்ணு’ உரை எழுதிய
எங்கள் நூல்கள்

நாகரத்திலும் தமிழிலும் மூலமும் பதவுரை பொழிப்புரைகளும்
விளக்க உரையும் குறிப்புகளும் உள்ளன

	ரூ.	பை
ஈச-கேன-கட-உபநிஷதங்கள் (அச்சில்)		
ப்ரச்ன-முண்டக-மாண்டுக்ய-ஐதரேய உபநிஷதங்கள்	1	75
தைத்திரீய உபநிஷத்து (பக்கம் 91)	1	50
சாந்தோக்ய-ப்ருஹதாரண்யக உபநிஷத்துக்களின் ஸாரம், ப்ரஹ்மஸூத்ரத்துடன்	6	00
ஸ்ரீமத் பகவத்கீதை	8	00
ஸ்ரீமத் பகவத்கீதை (பாராயணம்)	4	25
ஸ்ரீமத் பகவத்கீதை மூலம் (தமிழ்) பாக்கட் சைஸ்	2	00
விவேக சூடாமணி	4	25
,, காலிகோ	5	50
தைத்திரீய மந்த்ரகோசம்	6	00
ஸ்ரீதேவீ மாஹாத்மியம்	8	00
ஸ்ரீதேவீ மாஹாத்மியம் பாராயணம் (தமிழில் மூலம்)	2	00
ஜப விதானம்	1	00
ஸந்தியாவந்தனம் (பக்கம் 144)	2	00
(தமிழ்) காலிகோ	4	00
புருஷஸூக்தம்	2	25
பூஜாவிதானம் (தமிழ்)	5	00
ஸௌந்தர்யலஹரீ பாஷ்யம்	5	00
சிவானந்தலஹரி (பாஷ்யம்)	4	00
சிவ ஸ்தோத்திரங்கள்	1	25
ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாம பாஷ்யம்	5	00
ஸ்ரீ லலிதா த்ரிசதீ பாஷ்யம் (பக்கம் 184)	2	50
ஸ்ரீவித்யா	5	00
ஸ்ரீவிஷ்ணு ஸஹஸ்ரநாம பாஷ்யம்	6	00
,, ,, ஸ்தோத்ரம்	2	00
ஸ்ரீவிஷ்ணு ஸ்தோத்ரங்கள்	1	00
பஜகோவிந்தம்	1	00
அஷ்டோத்தர சத நாமாவளிகள் (பக்கம் 60)	0	75

ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம் (மாதப் பத்திரிகை)
வருட சந்தா. ரூ. 7-00 ஆயுள் சந்தா ரூ. 100

ஸ்ரீ ராமகிருஷ்ண மடம்
மயிலாப்பூர் : : சென்னை - 600 004.

Narada Bhakti Sutram Price Rs. 3-00